
# ஓய்வறியாப் பெருமகனார்



## சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை

**15.06.1948 - 02.10.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும்,
இல: 870, திருநகர் வடக்கு , கிளிநொச்சியை வதிவிடமாகவும்
கொண்ட

ஓய்வறியாப் பெருமகனார்

அமரர்

# சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை

அவர்களின் 31ஆம் நாள்

## நினைவு மலர்

## 01.11.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஈழத் திருநாட்டில் வந்துதித்த
பெருமகனாய் அன்பின் சீராளனாய்
பெற்றோர் பெரியோரின் செல்வப்
பிள்ளையாய் அரவணைக்கும் பெருந்
தந்தையாய் எமை ஆளாக்கி உயர்த்திய
ஒளி ஏணியாய் சுற்றம் விரும்பும்
சுடரொளியாய்
இனத்திற்காய் துடிக்கும் போராளியாய்
ஓய்வறியா செயல் வீரனாய்
எம் குடும்பத்தின் குல விளக்காய்
எம் நெஞ்சங்களில் நிலைத்த பேரன்பே
இம் மலரை உமக்குச்
சமர்ப்பணம் செய்கிறோம்

**ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!**

**இவ்வண்ணம்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



தோற்றம்
15.06.1948

# அமரர்

மறைவு
02.10.2022

# சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை

அவர்களின்

## "திதி நிர்ணய வெண்பா"

ஆண்டு சுபகிருது அமைந்த புரட்டாதி பதினைந்தில்
பூண்ட வளர்பிறை மூலம் ஏழாந் (ஸப்தமி) திதியதனில் இறை – தொண்டாற்றி
வாழ்ந்த தூயோன் பசுபதிப்பிள்ளை மண்விட்டுச்
சூழ்ந்தான் அரனடியில் துதித்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கண்களிரண்டும் அவன்கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வு
கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு
மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும்
வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல்
பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன்னாடுடை யான்படை யாட்சிகள்
பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படும் ஆயிடிலே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ...... எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் ...... அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் ...... இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ...... ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு ...... கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ...... எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென ...... முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல ...... பெருமாளே

## வாழ்த்து


வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்தவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை வாழ்க்கைச் சரிதம்

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு, சைவமும், தமிழும் தழைத்தோங்கியது ஈழநாடு. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திருமூலரால் சிவபூமி எனச் சிறப்பிக்கப்பட்ட ஈழ மண்ணின் சப்த தீவுகளில் ஒன்று நெடுந்தீவு. சிலப்பதிகாரத்தில் நாகதீன் நகர் என்று அழைக்கப்பட்ட நெடுந்தீவு ஆவகம், பசுத்தீவு, மூலிகைத்தீவு என்றும் சுட்டப்படுகிறது. நெடுந்தீவு பிரதேச சபையாக மாற்றப்படுவதற்கு முன்னர் கோட்டைக்காடு, உயரப்புலம், பனங்காணி, குருக்கள் மடம் என்ற சிறு குறிச்சிகளைத் தன்னுள் கொண்ட நெடுந்தீவின் முதலாம் வட்டாரத்தில் ஐயம்பிள்ளை சுப்பிரமணியம் மற்றும் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் தலைமகனாக 1948ஆண்டு ஆனி மாதம் 15ஆம் திகதி அவதரித்தார் அமரர் பசுபதிப்பிள்ளை.

### *வித்தும் வேர்களும்*

அமரர் பசுபதிப்பிள்ளை அவர்களின் பாட்டனார் ஐயம்பிள்ளை. ஊரும் உலகும் போற்ற வாழ்ந்த ஐயம்பிள்ளை வேலாசிப்பிள்ளை தம்பதியரின் தலைமகன் சுப்பிரமணியம். இவரின் தந்தை குடும்பத்தில் தனிப்பிள்ளை. தாயார் குடும்பத்தில் ஒரு அக்கா, இரண்டு தம்பிகள் என நான்கு பிள்ளைகள். தாயாரின் தந்தை தனகோடி இராமநாதன். தங்கள் குடி முதல்வரும் "ஓதுவான் குடி" யெனப் பெயர்வரக் காரணமாக சுப்பிரமணியம் என்ற பெயரை பேரனுக்கு இட்டு மகிழ்ந்தார். (இராமநாதன் 1934இல் அச்சுவினியில் பிறந்த தனது இளைய மகன் தனகோடியின் தலைமகனுக்கு இதேபெயரை இட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது) பாட்டனின் வாழ்வும் பணிகளும் பேரனையும் பற்றிக் கொண்டன. இரு தம்பியர்களும் ஒரு தங்கையும் சகோதரர்கள். மூத்த தம்பியார் சின்னையாபிள்ளை. பாரத சுதந்திரப் போராட்ட வீரர் சுபாஸ் சந்திரபோஸின் இந்தியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய இராணுவத்தில் இணைந்து பணியாற்றியவர். இந்திய சுதந்திரத்திற்குப் பின்னர் தனது இறுதிவரை தமிழ்நாட்டில் வாழ்ந்தவர்.

அன்னை தெய்வானைப்பிள்ளை ஆறுமுகம் அவர்களின் கடைசி மகள். தந்தையார் கார்த்திகேசு ஆறுமுகம் கரமத்தைக் கந்தசுவாமிக்கு திருக்கோயிலெடுத்து திருக்கோயில் பணிகளுக்காக அந்தணப் பெருமக்களைக் கொண்டு வந்து திருக்கோவில் பணிகளை சிறப்பாகச் செய்வித்தார். மற்றும் மக்களுக்கான பணிகளைச் செய்யும் பணி வல்லுநர்களைக் குடியமரச் செய்யும் காரியத்தில் முக்கியமானவராக முன்னின்றுழைத்த சங்கரப்பிள்ளை வழிவந்தவர். இப் பெரியார் வழி வந்தவர்களை சங்கிலியார் மரபு அல்லது சங்கிலியார் கூட்டம் என்று ஊர் மக்கள் அழைத்தனர். தெய்வானைப்பிள்ளைக்கு மூன்று அண்ணாக்கள். ஓர் அக்கா என குடும்பத்தில் ஐந்து பிள்ளைகள்.

அமரர் பசுபதிப்பிள்ளைக்கு ஆறு தம்பிகள். இரண்டு தங்கைகள். குடும்பத்தில் ஒன்பது பிள்ளைகள். குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் கல்வி, தொழில் வழிகளில் பசுபதிப்பிள்ளை தலைமகனாக நின்றுழைத்தார். அமரன் குலசிங்கம், சச்சிதானந்தம், பரமானந்தம், அறிவழகன், அருந்ததி, பரஞ்சோதி, மகாலிங்கம், இரவீந்திரன், எல்லா உடன்பிறப்புக்களுக்கும் திருமணமாகி குழந்தைகளுடன் வாழ்கின்றனர். குலசிங்கத்தைப் பீடித்திருந்த நோய் அவரைப் பலிகொண்டது. குடும்பத்தில் தலைமகனின் மறைவுடன் ஏலவே ஏற்பட்ட வெறுமை மேலும் விரிவடைந்தது.

***இளம்பராய வாழ்வு***

1953ஆம் ஆண்டு நெடுந்தீவு மேற்கு மகேஸ்வரர் வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய அமரர் பசுபதிப்பிள்ளை, சாதாரண தரக் கல்வியுடன் தன் படிப்பை நிறுத்திக் கொண்டு பிரதேச மக்களின் நலன் காக்கும் இளைஞனாக பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் களப்பணியாளனாக தன்னை மாற்றிக் கொண்டார். சமூகம் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரம் சார்ந்த பணிகளுடன் நாடகத்துறையிலும் இவர் ஆர்வம் கொண்டு செயற்பட்டமை இவரின் இளம்பராய நினைவுகளாகும். சிறிய வயதிலேயே பேரினவாத ஒடுக்குமுறை கண்டு வெகுண்டெழுந்து குரல் கொடுத்த இவர், தமிழரசுக் கட்சியில் இணைந்து தனது அரசியல் வாழ்வையும் இளம்பராயத்தில் துவங்கினார்.

***இல்லற வாழ்வு***

1984ஆம் ஆண்டு பசுபதிப்பிள்ளை இல்லறவாழ்வில் நுழைந்தார். தனுக்கோடி முருகேசு தம்பதியரின் இளையமகள் யோகேஸ்வரியைத் தன் துணையாகக் கரம் பற்றி இல்லறம் எனும் நல்லறம் சென்றார். குடும்ப நல உத்தியோகத்தரான இவரின் துணைவியின் அனைத்துக் களப்பணிகளிலும் பூரண ஒத்துழைப்பு வழங்கியதுடன் இடப்பெயர்வு மற்றும் போராட்ட காலங்களில் அவரும் துணைவியுடன் இணைந்து புரிந்துணர்வுடன் பணியாற்றினார். இறுதிமூச்சு வரையிலும் குடும்பத்தின் தலைவனாய் அனைத்துப் பணிகளையும் செய்து வந்தார். நாள்தோறும் அதிகாலை மனைவியுடன் எழுந்திருந்து மனைவிக்கு ஒத்தாசை புரிந்து அனைத்துப் பணிகளிலும் சரிசமமாக பங்கு கொண்டு வாழ்வெனும் அழகிய தேரில் சிறப்புறப் பயணித்தார்.

அவர் வாழ்ந்த இல்லறத்தின் நற்பேறுகளாய் இரண்டு பெண் செல்வங்களைப் பெற்று மைதிலி, நிருத்திகா எனப் பெயரிட்டு மகிழ்ந்தார். பிள்ளைச்செல்வங்களை வளர்த்து கல்வி அளித்துக் கொண்டாடினார். அவர்களுக்கு திருமணம் செய்து மகிழ்ந்தார். மைதிலி புவியியல் பாடத்தில் "பி.ஏ" பட்டம் பெற்று தந்தைக்கு புகழ் சேர்ந்து சுதாகரனை துணையாகக் கரம்பிடித்தார். நிருத்திகா விஞ்ஞானத்துறையில் பி.எஸ்.சி மற்றும் எம்.எஸ்.சி பட்டங்களை முடித்து தந்தைக்கு பெருமை சேர்த்து, சரண்ராஜை கரம் பற்றினார்.

மைதிலி சுதாகரன் தம்பதியர் பிரபாதனாவைப் பெற்றெடுத்து, பேர்த்தியாகக் காட்டி பசுபதிப்பிள்ளைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வூட்டினர். நிருத்திகா சரண்ராஜ் தம்பதியர் மிதுன் என்ற பேரனைப் பெற்றளித்து பேரப் பிள்ளைகளால் இவர் செல்வ வீடு செழித்தது. சுதாகரன் மைதிலி தம்பதியர் 15.10.2022 அன்று ஆண் குழந்தையைப் பெற்றெடுத்த போதும் அவனைக் காண தாத்தா இல்லாமல் செய்தான் காலன் எனும் கொடியோன். பிரபாகரன் எனப் பெயரிடப்பட்ட பேரனின் வருகைக்காய் இவர் உள்ளன்பு திளைத்துக் காத்திருந்தார். என்றாலும் பேரன் கொண்டிருந்த பேரன்பை அவன் ஒருநாள் அறிவான்.

### *கிராம சேவகனாக*

பிறந்த மண்ணில் கல்வி கற்று வந்த பசுபதிப்பிள்ளைக்குக் கல்வியா? பாண்டியன்குளத்தில் தனிமனிதனாகக் காடு கரத்து, கழனி காணும் முயற்சியில் நிற்குந் தந்தைக்கு உதவுவதா என்ற நிலையில் கற்றலைக் கைவிட்டுப் பாண்டியன் குளஞ் சென்றார். பெறுபேறு ஒரு சிறந்த விவசாயி தோன்றினான். 1978ஆம் ஆண்டில் சமூக சேவை உத்தியோகத்தராக நியமனம் பெற்று மக்கள் பணி புரிந்து வந்த நிலையில் 1985ஆம் ஆண்டில் கிராம அலுவராகவும் நியமனம் பெற்றார். பூவரசங்குளம், கரும்புள்ளியான் போன்ற பின்தங்கிய இடங்களில் நீண்ட காலம் சேவையாற்றியதுடன் கனகபுரம், திருநகர் தெற்கு மற்றும் 1996 போர்க்கால கட்டத்தில் இடம்பெயர்ந்து அக்கராயனிலுள்ள எட்டாம் கட்டைப் பிரதேசத்திலும் பணியாற்றினார். அப்போது போரால் அகதிகளாகி அல்லல் பட்ட மக்களுக்கு பல்வேறு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டார்.

1977இல் இனக்கலவரம் வெடித்த சமயத்தில் தமிழ் மண்ணில் அடாவடி செய்த பேரினவாதிகளை வெளியேற்றுவதில் பிரதான பாத்திரம் ஏற்று வெற்றிகரமாகச் செயற்பட்டார். பாண்டியன்குளம் அ.த.க பாடசாலையில் பெற்றோர் ஆசிரியர் சங்க செயலாளராகக் கடமையாற்றினார். பின்னர் மன்னார் மாந்தை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சேவையாற்றியவேளை, மக்கள் பெரும் நிர்வாக இன்னல்களை அனுபவித்தனர். அதற்குத் தீர்வாக மாந்தை கிழக்கை முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *போர்க்காலப் பணியாளன்*

1985ஆம் ஆண்டு காலத்தில் மேயர் மாறனுடன் இணைந்து, பேரினவாத ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவைகளை ஆற்றினார். விமானத்தாக்குதல், செல்தாக்குதல் போன்றவற்றில் காயப்பட்ட மக்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுதல், உணவு, உடைகளைப் பெற்றுக் கொடுத்தல், போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பாடசாலை மாணவர்களுக்கான உதவிகளை வழங்கினார். போராளிகள், மாவீரர்களின் நலன்சார் பணிகளில் தானாக முன்வந்து தன்னை ஈடுபடுத்தினார். போர்முனைகளுக்கு உணவைக் கொண்டு செல்லுதல், மாவீரர்களின் வீரவணக்க நிகழ்வுகளில் பங்கெடுத்தல் என்று முழு நேரமும் ஓய்வின்றி போர்க்காலத்தில் பணி செய்தார்.

1987இல் மேயர் மாறனின் மனைவியை இராணுவ முகாமில் அடைத்து வைத்திருந்த வேளையில், மகளிரை இணைத்து பெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தார். மாறனின் மனைவியை விடுக்கக் கோரும் மகஜரை துணுக்காய் இராணுவ அதிகாரியிடம் கையளிக்கச் சென்றவேளை, மாதர் சங்கத் தலைவியையும் பசுபதிப்பிள்ளை அவர்களையும் கைகளையும் கண்களையும் கட்டி தடுத்து வைத்து மிரட்டிய போதும் அவர் பணிந்துவிடவில்லை. மக்களின் ஆதரவாலும் பசுபதிப்பிள்ளையின் உறுதியாலும் அச் சிறையில் இருந்து அவர் மீண்டார். "சூரியக்கதிர்" இடப்பெயர்வால் கிளிநொச்சி கனகபுரத்தில் இருந்த மாதகல் மக்களின் அகதிமுகாமில், அக்காலத்தில் கனகபுரம் கிராம அலுவராய் இருந்த சமயத்தில் அவர் அம் மக்களுக்காக பல்வேறு தொண்டுகளைப் புரிந்திருந்தார். அத்துடன் போர்க்காலத்தில் மக்கள் தமைத் தற்காத்துக் கொள்வதற்கு பயிற்சிகளையும் இவர் வழங்கியுள்ளார்.

### *குடும்பம் சுமந்து*

1974 ஜூலையில் தந்தையார் சிவப்பேறெய்தினார். தந்தைக்கு துணை என்ற நிலை போய் தந்தையின் சுமை முழுவதையும் சுமக்கும் தந்தை மகனாகினார். கிராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையாளன் பணியுடன் வயல் பணிகள், தங்கைளிருவரதும் திருமணங்கள், தம்பிமார்களின் கல்விப் பணிகள் எனச் சுமைகள் பெருகின. ஆனாலும் சோர்ந்துவிடவில்லை. தந்தைக்கு பிள்ளையாயும் சகோதரர்களுக்கு அண்ணனாக மாத்திரமின்றி தந்தை போலவும் நின்று உழைத்தார். சுய முயற்சியால் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண பரீட்சை சித்தி, தங்கையர்களின் திருமணம், குடும்பப் பொருளாதாரம் எல்லாம் வெற்றிகரமாய் நிறைவுபடுத்தினார். 1974இல் தந்தை சுப்பிரமணியம் இறந்த போது கடைசிச் சகோதரனுக்கு வயது நான்கு. குடும்பத்தை தந்தையின் இடத்தில் நின்று பொறுப்பெடுத்து அனைத்து சகோதரர்களுக்கும் திருமணம் செய்து வைத்த பொறுப்பான அண்ணன் ஆவார்.

***தெய்வத் தொண்டனாக***

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்திற்கு பணியிட மாற்றம் பெற்ற நிலையில் துணைவியாரின் திருநகர் இல்லத்தில் குடிவந்தார். தொன்று தொட்டு குடிப்பரம்பரை செய்து வந்து ஆலயப் பணிகளை இவரும் புரியத் துவங்கினார். அரச பணியுடன் ஆலயப் பணிகளும் இணைந்துகொண்டன. பிரதேச செயலாளரின் வேண்டுகோளின் பெயரில், திருநகர் மீனாட்சி அம்மன் ஆலயப் பணிகள், பின்னர் கண்ணன் கோயில் பணிகள் என்பன இவர் பணியினால் பலன் பெற்றன. "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற கொள்கை கொண்டு ஓய்வு பெற்ற பின்னர் முழு நேரமாக இறைபணி செய்து வந்தார். ஆலயங்களுக்கு தொண்டு செய்தார். இத் தொண்டு புரியும் பண்பு, பசுபதிப்பிள்ளை அவர்களின் தாய், தந்தையர் மரபு வழி வந்தது என்பதை அவர் சரிதம் தெளிவாக எடுத்துரைக்கிறது.

கிளிநொச்சி மண்ணின் சைவத் திருத்தலங்காக மிளிரும் உருத்திரபுரீச்சரம், ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் ஆலயம், கிளி நகர் கண்ணன் ஆலயம் என்பவற்றில் ஆலய பரிபாலன சபையின் தலைவராக நெடுங்காலம் பணியாற்றிய இவர் அவ் ஆலயங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனர்நிர்மாணம் செய்யும் பணியில் ஒரு ஒருங்கிணைப்பாளனாக ஈடுபட்டு குடமுழுக்கு செய்து கும்பாபிசேகம் நடாத்தினார். கிளி நகர் கிருஸ்ணர் கோயிலில் (கண்ணன் கோயில்) 2000ஆம் ஆண்டு முதல் 18 வருடங்கள் தலைவராக இருந்து இவர் ஆற்றிய தொண்டினால் இன்று அவ் ஆலயம் பெரும் நிர்மாணம் கொண்டுள்ளது.

### *சிவத்தொண்டனாக*

இவர் முன்னோர்களின் இறைபணியினைத் தொடர்ந்தாலும் அவர்கள் காலம் போலல்ல இவர் வாழ்ந்த காலம். ஈழத்தின் பூர்வீக ஆலயங்களில் ஒன்று உருத்திரபுரீச்சரம். இது ஈழ ஈச்சரங்களில் ஒன்று. சோழர்களால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட தொன்மை கொண்டது. இவ் ஆலயத்தை தொல்லியல் திணைக்களம் அபரிக்க முற்பட்டபோது அதனைக் கடுமையாக எதிர்த்து பெரும் தொடர் போராட்டங்களை முன்னெடுத்தார். போராட்டங்களுடன் சட்ட ரீதியாகவும் இதனை எதிர்கொண்டு வெற்றி பெறும் முகமாக கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து சட்டத்தரணிகளின் முழு ஒத்துழைப்புடன் குறித்த அபகரிப்பை இடை நிறுத்தியமை சிவனுக்கு செய்த ஒப்பற்ற தொண்டாகும்.

அத்துடன் இத் தொண்டு சிவனுக்கு மாத்திரமின்றி தமிழ் இனத்திற்கும் அதன் தொன்மைக்கும் வரலாற்றுக்கும் செய்த மகத்துவமான பணி. தன் வாழ்வுக் காலத்தில், முக்கியமாக ஓய்வுக் காலத்தில் கோயில்களில் தன் காலங்களைச் செலவளித்து, இறை தொண்டு செய்து மக்களின் பேரன்பையும் பெரும் அபிமானத்தையும் வெற்றி கொண்டார் அமரர்.

### *விடுதலைப் புலிப் போராளியாக*

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் மக்களாக பல தொண்டாற்றிய நிலையிலும் அதனையும் கடந்து தாயக மண்ணுக்கும் மக்களுக்கும் விடுதலைப் போராட்டத்திற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்ற வேண்டும் என்று எண்ணம் கொண்டு தன்னை விடுதலைப் புலி போராளியாக இணைத்தார். போராளியாக உருவெடுத்த பசுபதிப்பிள்ளை இளமாறன் எனும் பெயர் பூண்டார். களநிலைகளுக்கு சென்று பணியாற்றியதுடன் அரசியல் ரீதியான செயற்பாடுகளிலும் ஈடுபட்டார். இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பல பங்களிப்புக்களை வழங்கிய நிலையில் அக்காலத்தில் மறைந்த மாவீரர்களின் இறப்புக்களை பதிவு செய்கின்ற பணியிலும் தன்னை ஈடுபடுத்தினார்.

போராளிகள் மக்கள் மத்தியில் முன்னெடுக்க வேண்டிய காரியங்கள் பலவற்றுக்கு இவரை அணுகுவது வழக்கமானது. அவற்றைத் திறம்படச் செய்து முடிப்பார். மக்களில் ஒருவனாக இருந்த சமயத்தில் தலைவர் பிரபாகரனின் 50ஆவது பிறந்த நாளின்போது கிளிநொச்சியில் 50 பானைகள் வைத்து பொங்கல் செய்து மக்கள் உண்டு மகிழ்ந்த நிகழ்வையும் இவரே முன்னின்று நடாத்தியிருந்தார். போராட்டத்திற்கான அரசியல் பணிகளையும் மக்கள் எழுச்சிப் பணிகளையும் முன்னெடுப்பதில் மிகுந்த அக்கறையுடன் முன்பாகவே இளமாறனாகச் செயற்பட்டார். இளமாறன் என்றழைக்கப்படும் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை அவர்கள் மறைந்துவிட்ட தருணத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் அதன் தலைமை இருந்திருந்தால் மிகப் பெரும் மதிப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கும். அவரது இறுதிப்பயணமும் வீரமரியாதையுடன் நிகழ்ந்திருக்கும். எனினும் முன்னாள் போராளிகள், அமைப்புக்கள், பொதுமக்கள் எனப் பலரும் அவர் இழப்பில் திரண்டு துயர் கொண்டனர்.

***இறுதியுத்தகாலப் பணி***

2009ஆம் ஆண்டு ஈழத் தமிழ் மக்கள் பாரிய இனவழிப்புப் போரை எதிர்கொண்டபோது செல் மழைகளின் மத்தியிலும் விமானக் குண்டு வீச்சுகளின் மத்தியிலும் ஓய்வின்றித் தன் பணியைத் தொடர்ந்தார் அமரர் பசுபதிப்பிள்ளை அவர்கள். போரில் காயப்பட்ட மக்களின் நலன்கள், பட்டினியில் துடித்த மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்கள் போன்றவற்றில் அக்கறை கொண்டு செயற்பட்டதுடன் காயப்பட்ட போராளிகளின் மருத்துவப் பணிகளின் போதும் வீரவணக்க நிகழ்வுகளின் போதும் மக்களில் ஒருவனாகவும், போராளியாகவும் நின்று பெரும்பணி புரிந்தார்.

2008இல் கிராம அலுவலர் பணியில் இருந்து ஓய்வு பெற்ற வேளையிலும் அவர் ஆற்றிய பணிகள் ஓயவில்லை. முள்வேலி முகாமிலும் மீளக்குடியேற்றத்திலும் மக்களுக்கு பல தொண்டுகளைச் செய்தார். பழுத்த அனுபவம் மிக்க கிராம அலுவராக இருந்த பசுபதிப்பிள்ளை மக்களின் மறுவாழ்வுப் பணிகளைத் திறம்படச் செய்தார்.

### *அரசியல் போராளியாய்*

தன் இளம்பராயத்திலேயே அரசியற் பாதையையும் செப்பமாக அமைத்தார். தமிழரசுப் பசுபதிப்பிள்ளை என்றும் கூட்டணிப் பசுபதி என்றும் தன் இளைய வயதில் அரசியற் பணியால் மக்கள் அபிமானம் பெற்ற இவர், பதவிகளுக்காகவோ, அதிகாரத்திற்காகவோ, பணத்திற்காகவோ அரசியலுக்குள் நுழையாமல் பேரினவாத ஒடுக்குமுறைகளை கண்டு அதற்கு எதிராய் குரல் கொடுக்கும் தன்னலமற்ற அரசியல் பிரிதிநிதியாய் மக்கள் மத்தியில் மதிப்பைப் பெற்றுக்கொண்டார். தமிழரசுக் கட்சிக்குப் பிறகு கூட்டணி கட்சி அரசியல் துவங்கிய சமயத்தில் 77ஆம் ஆண்டில் தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அதில் இளைஞனாய் களத்தில் நின்று இவர் ஆற்றிய பணிகள் காலத்தால் அழியாதவை.

அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரம் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது "மக்களுக்குச் சேவை புரியும் பணி. மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு" எனும் தலைவர் பிரபாகரனின் பொன்மொழியை அமரர் பசுபதிப்பிள்ளை அவர்கள், தனது விருந்தினர் அட்டையில் மாத்திரமின்றி இதயத்திலும் பொறித்துக் கொண்டே அரசியல் களத்தில் இறங்கினார். அதிகார மற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண நலன்களுக்கான அரசியல் உலகில் தலைவரின் சிந்தனையை அடியொற்றி தன்னை மாறுபட்ட மக்கள் தலைவராக தகவமைத்தார்.

## *துயிலும் இல்லத் தொண்டராக*

2009 முள்ளிவாய்க்காலுக்குப் பின்னர் மாவீரர் நாளை துயிலும் இல்லங்களில் முன்னெடுக்க கடுமையான தடைகள் விடுக்கப்பட்ட நிலையில், 2016ஆம் ஆண்டு இளைஞர்களை இணைத்து துயிலும் இல்லத்தைத் துப்புரவு செய்து மாவீரர் நாள் நிகழ்வைக் கொண்டாடும் ஏற்பாடுகளை துணிவோடு முன்னெடுத்தார். கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இப் பணியைத் துவங்கியதுடன் முழங்காவில் துயிலும் இல்லத்திலும் தீபம் ஏற்றும் ஏற்பாடுகளை மேற்கொண்டார். துயிலும் இல்லப் பணிக் குழுவின் தலைவராகவும் இவர் செயற்பட்டார். இதனால் பல அழுத்தங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டார். புலியின்ரை ஜி.எஸ் என்று சிஐடியினரால் அழைக்கப்பட்ட அமரர் பசுபதிப்பிள்ளை அவர்கள், மாவீரர் நாள் நிகழ்வுகளைக் கொண்டாட தலைமையேற்றமைக்காக நாலாம் மாடிக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டார். அத்துடன் 2016இல் இருந்து 2019ஆம் ஆண்டு வரையில் மாவீரர் நாள் நிகழ்வுகளை முன்னெடுக்க முன்னின்று உழைத்த நிலையில் வரும் மாவீரர் நாளுக்கான பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திய நிலையிலேயே காலமாகினார்.

## *வட மாகாண சபை உறுப்பினன்*

இளம்பராயத்தில் இருந்தே தமிழரசுக் கட்சியில் இணைந்து செயற்பட்டும், மக்கள் பணியினால் பெரும் ஆதரவை இவர் பெற்றிருப்பதாலும் 2013 மாகாண சபைத் தேர்தலில் இவரின் மக்கள் ஆதரவு கண்டு கட்சி இவரைக் களமிறக்கியது. உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரன் தலைமையில் வடக்கு மாகாண சபைத் தேர்லில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் இவர் களமிறங்கினார். தேர்தலில் மக்கள் பெரும் ஆதரவுடன் வெற்றி பெற்ற இவர் 26,132



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குகளை விருப்பு வாக்காகப் பெற்றார். 2013ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நீதியரசர் விக்கினேஸ்வரன் முன்னிலையில் வட மாகாண சபை உறுப்பினராகப் பதவி ஏற்றார்.

தேர்தலுக்குப் பிறகு மின்சாரம் மற்றும் மின்மயமாக்கல் குறித்து முதலமைச்சருக்கு உதவ அவர் நியமிக்கப்பட்டார். மாகாண சபை உறுப்பினராக தமிழர் விடுதலைக்காகவும் நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் இனப்படுகொலைக்கு எதிராகவும் ஓய்வின்றிக் குரல் கொடுத்த அமரர் பசுபதிப்பிள்ளை, தன் நிதி ஒதுக்கீடுகளை நகரங்களுக்கு அப்பால் கிராமங்களில் மேற்கொண்டு பல்வேறு அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுத்தார். போரால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய மண்ணில் அரசியல் பிரதிநிதியாகவும் தன் பணி செய்து நிறைவு கொண்டார்.

"விடுதலைப் போராட்டத்தில் மக்கள் வெறும் பார்வையாளராக இராது, நேரடிப் பங்காளிகளாக மாறவேண்டும்" என்றும் "விடுதலைப் புலிகள் மக்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல. விடுதலைப் புலிகள் ஒரு மக்கள் இயக்கம். மக்கள் தான் புலிகள்" என்றும் அமைந்த தலைவரின் பொன்மொழிகளை வாழ்வின் சிந்தனையாக வரித்து வாழ்ந்து காட்டி வரலாற்றை நிறைவு செய்துவிட்ட அமரர் பசுபதிப்பிள்ளை அவர்கள் 02.10.2022 அன்று சிவபதம் அடைந்தார். இறுதிவரையில் தேசியத் தலைவரை நெஞ்சில் நிறுத்தி அவர் மேற்கொண்ட நெருப்பாற்றுப் பயணம் முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரும் அவரை ஓய்வறியாப் போராளியாய் மக்கள் மனங்களில் நிலை நிறுத்தியுள்ளது. அன்னார் மறைந்தாலும் அவர் வாழ்ந்த வாழ்வும் ஆற்றிய தொண்டுகளும் அவர் எழுப்பிய குரலும் இம் மண்ணில் ஒருபோதும் மறையாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லாளின் உள்ளத்திலிருந்து...........!

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடனே பலபணிகள் புரிந்து
பாசமாய் உறவுகளை அரவணைத்து
மாண்புடனே வாழ்ந்த பெருவாழ்வெங்கே?

வாழ்க்கைத் துணையாய் வந்த நாளிலிருந்து
வழித்துணையாய் வந்தவரை
கண்ணிமைக்கும் நொடியில் - காலன்
கவர்ந்து சென்றதென்ன ?

கண் மழை பொழிகிறதே
வார்த்தை தடுமாறுகிறதே
நேற்றுக் கண்ட உங்கள் முகம் இன்று
சென்ற வழி எங்கே ?

வாழ்வின் இன்பத்திலும் துன்பத்திலும்
உடனிருந்த உங்கள் வாசம் எங்கே ?
குடும்பத்திற்காய் பார்த்துப் பார்த்துச் செய்யும்
உங்கள் அன்புமுகம் காண எங்கு செல்வோம்?

உறவுகளைப் பேண வேண்டி - எல்லா
இன்ப துன்பங்களிற்கும் சேர்ந்தே செல்வோமே
இன்று தனிமையில் கலங்குகின்றேன்
ஆறுதலாய் வருவீர்களா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமெல்லாம் எம் உறவு தொடருமென நானிருக்க
கவர்ந்து சென்ற இறைவன் - உமை
தம் பாதங்களில் வைக்கட்டும்
அமைதியாய் இளைப்பாறுங்கள் .

நல்லோர் பெயர் என்றும் - அவனியிலே
நிலைத்திருக்க - அன்பானவரே!
உங்கள் நினைவுகள் எம்முன்
என்றும் உறைந்திருக்கும்.

பாசத்தின் உறைவிடமாய் - எமக்கு
வழிகாட்டும் அன்பொளியாய்
என்றும் நீங்கள் வாழ்வீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றேன்.

மனைவி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள்மாரின் மனதிலிருந்து...

"அப்பா" என்று அழைத்தவுடன்
"என்ன பிள்ளை" எனக்
கேட்கும் நீங்கள் எங்கே?
அல்லல்பட்டு அரற்றுகிறோம்
வரவே இல்லையே அப்பா!!

காற்றில் உங்கள் வாசம்
எம்முடனே வருவதாய்
உணர்கிறோமே அப்பா.
அருவமாய் எம்முடனே
உற்ற துணையாய் உள்ளீர்களோ ?
உருவத்தைத் தேடி அலைகிறோம்.

உங்கள் விபூதி நிறைந்த நெற்றியும்
வெள்ளை வேட்டி சட்டையும்
எப்போதும் பூக்கும் குழந்தைச் சிரிப்பும்
கண் முன் நிற்கிறதே அப்பா.

நாம் குழந்தையாய் இருக்கும் போதும்
நமது பிள்ளைகள் வந்த போதும்
வெளியிலிருந்து வரும் உங்கள் கைபார்க்கும் எங்களை
எப்போதுமே நீங்கள் ஏமாற்றியதில்லையே!!
எமக்குப் பிடித்தவற்றை வகை வகையாய்
வாங்கிவரும் தங்களிற்காய் தவமிருக்கின்றோம்
நாமும் உங்கள் பேரன்களும், பேர்த்திகளும்
எங்கே சென்றீர்கள் அப்பா ?

கண்டிப்பை அறிந்ததில்லை அன்பை மட்டுமே
திகட்டத் திகட்டத் தந்த நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களின் சிறந்த வழிகாட்டியானீர்கள்.
எங்களைப் போன்றே
உங்கள் உறவுகள் அனைவரையும்
நேசித்து உறவாடினீர்களே அப்பா!!
இன்றும் எல்லோரும் தவிக்கின்றோமே
உங்களைக் காணவில்லை.

எமது வீட்டில் அதிகாலையில்
ஒலிக்கும் வானொலி
இப்போது மௌனித்து விட்டதே அப்பா!
உங்கள் காலைகள் வானொலியுடன் புலர்ந்து
இரவு செய்தியுடன் நிறைவடையுமே
இன்று அம்மா தனிமையில்
வானொலியைத் தேடுவதே இல்லையப்பா.

உங்கள் இள வயதுக் கதைகளை
அத்தை சொல்லிக்கேட்டு
தங்களின் குடும்பப் பொறுப்பினை
எண்ணி வியந்தோமே அப்பா...
எங்கள் பிள்ளைகளும் தங்களைப்போல் வளர
உற்ற துணையிருந்து வழிகாட்டுங்கள்....

நாம் எங்கு சென்றாலும்
உங்கள் பெயர் கூறியே
அடையாளப்படுத்துவார்கள் அப்பா.
அனைத்து விடயத்திலும் உங்களைச் சார்ந்தே
நடந்து விட்டோமே - இன்று
நீங்கள் இல்லாத வாழ்க்கையினை
நினைக்கக் கூட முடியவில்லையப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழையும் , சமயத்தையும் சமூகத்தையும்
நேசித்த உங்கள் பண்பு
குடும்பத்தைத் தாண்டி உங்களை
அனைவரும் கொண்டாட வைத்திருக்கிறதே அப்பா
உங்கள் சேவை இறுதி வரை உங்களைப்
பெருமைப்படுத்தி விட்டதப்பா......

பிறந்ததிலிருந்து இன்றுவரை நெடுந்தூரம் -எம்
கைபிடித்து வந்த நீங்கள் இன்று எங்கே ?
யார் என்ன சொன்னாலும் சிவன் கோவில்
அப்புசாமியிடம் சென்றதாக உங்கள்
பேரக் குழந்தைகள் கூறுவது கேட்கிறதா ?

நீங்கள் வாழ்ந்து காட்டிய வழியில் வாழ்வதை விட
வேறென்ன செய்ய முடியும் எங்களால் ?
தெய்வமாக எம்முடனே வாருங்கள் அப்பா

துயரில்
மகள்மார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகன்களின் மனக்குமுறல்

நாடும் வீடும் உம்மிரு கண்களல்லவா மாமா!
வெண்ணீராடை அணிந்த எம் குடும்பத்தின் குலக் கொழுந்தே!
உம் ஆடை மட்டுமல்ல உள்ளமும் வெண்மை தான்
ஓய்வறியாது உழைத்திட்ட எம் உத்தம மாமனாரே!
நாடும் வீடும் உம்மிரு கண்களல்லோ?
இலட்சியத்தில் உறுதி
பொதுவாழ்வில் தூய்மை
இத் தத்துவத்தை கடைசிவரை
உயிர் மூச்செனக் கொண்ட இலட்சிய நாயகனே!
கடமை தவறாத குடும்பத் தலைவனாக
இனத்தை நேசிக்கும் இனப்பற்றாளனாக
நெடுந்தூரப் பயணத்தில்
நீங்கள் செய்தவை அளவற்றவை

எம் இனிய மாமாவே
தங்கத் தாம்பாளத்தில் வைத்து தாங்குவது என்பார்களே
அதன் மெய்ப்பொருளை உணரச் செய்த
எங்கள் பொன்மனச் செம்மல் நீங்கள்
மருமகன்களின் சுமைகளைத் தாங்கிய
தெய்வீக மாமா நீங்கள்
உங்கள்போல் கிடைப்பாரா
மாமானார் எவர்க்கும் இவ்வுலகில்!

பெருமரமாய் படர்ந்து விரிந்த எம் குடும்பத்தின் ஆணிவேரே
எம்மை தாங்கிய பூமியே
எம்மையும் தங்கள் பேரக் குழந்தைகளையும்
நிர்க்கதியாக விட்டு இடை நடுவில் போனதேனோ
படலை திறந்து கிடக்கிறது
நாமும் பார்த்தபடி இருக்கிறோம்
சிவன் கோவில் சென்ற அம்மப்பா வருவார் எனக் காத்திருக்கும்
உங்கள் செல்லக் குட்டான்களை என்ன சொல்லித் தேற்றிடுவோம்?

தெய்வத் திருமகனே
சைவத் திருத் தொண்டனே
ஓய்வறியாப் பெருமகனே
இளைப்பாறுக இறைவன் திருவடியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலியின் மனதிலிருந்து

அன்பான புன்முறுவலும்
ஆழமான சிந்தனையும்
இனிய பேச்சுத்திறனும்
உற்றார் உறவுகளின் எண்ணங்களை
தன் எண்ணமாக்கும் கரிசனையும்
மாலை முடிந்தும்
மறையாத சூரியன்போல்
எங்கள் மனதில் பதிந்திருக்கும்
அன்புத் தெய்வத்துக்கு
எமது இதய அஞ்சலிகள்

- திரு. திருமதி. இராசலிங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறப்புக்களின் உதிரப்பிறப்பில்....

ஒன்றாய்ப் பிறந்தோம்
ஒரு முலையில் பாலுண்டோம்
உணவு உண்டாலும் ஒரு தட்டில்
பறித்துண்டு வாழ்ந்தோம்.
குன்றா மகிழ்வுடன் கூடி நின்று
கும்மாளம் கொட்டும் நேரம்
அப்பாவைப் பறி கொடுத்தோம்
அன்றிருந்து தந்தையாய்,
அண்ணாவாய், தோழனாய்
ஒன்றாடி அம்மாவுடன் இணைந்து
எமை ஒன்றாக்கி வளர்த்திட்டீர்

தமிழ் தேசியத்திற்காய், இன விடுதலைக்காய்
ஆணி வேராய்ச் செயற்பட்டீர் - அதன் வழியே
தடம் மாறாது எமையும் வளர்த்தெடுத்தீர்.
அப்பாவின் "திருநீற்றுமணியம்" எனும் பெயரை
தப்பாமல் என்றும் நெற்றியிலே ஏற்றினீர்
இனிய வாழ்விலும், துன்பத்திலும் சோர்விலும்
எம்மோடு இருந்து வழிகாட்டினீர்.
அன்பு, பாசம், கருணை, பெற்றோரை மதித்தல்,
பெரியோரைக் கனம் பண்ணுதல் எனும் .........
அறங்களை எமக்குத்தந்து,
அதன்படி வாழ்ந்தாய் அண்ணா
கத்துகிறோம், கதறுகிறோம் பலனில்லை
என்றும் நீ சிவன் கழலிருப்பாய்,
எந்தன் தெய்வமே! குல விளக்கே!
எம்முடனும் நீங்கள் என்றும் இருப்பீர்கள்
என்ற நம்பிக்கையுடன் .............

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

- உடன் பிறந்த சகோதர சகோதரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனர் மைத்துனிமார் புலம்பல்

பசுபதி மச்சான் எமக்கு
வாய்த்த வரம்
கன்னங் குழிச்சிரிப்பு -
பார்த்தோரை வயப்படுத்தும்
பண்பாட்டுடன் வரவேற்பு
குடும்பத்தின் குத்து விளக்கு
நிலமகள் நாணும் பொறுமை
கனவிலும், நனவிலும் சகோதரர்

மைத்துனர்கள் குடும்பத்தைப் பற்றிய சிந்தனை
திடீரெனக் கேட்ட செய்தி
அந்தோ ஆலமரம் சாய்ந்ததுவோ ?
அலறுகிறோம்
ஆண்டவனை வேண்டுகிறோம்
மீண்டும் பிறப்புண்டேல் எம்முடன் வந்துவிடு
மைத்துனரே!!
நீங்கள் தெய்வத்தின் திருவடியில்
என்றுமிருக்க இறைவனை வேண்டிப்
பிரார்த்திக்கின்றோம்.

- மைத்துணர், மைத்துனிமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மச்சானுக்கு ஒரு மடல்.......

இந்துமா கடல் நாற்புறமும் சூழ,
எழிலோங்கும் ஈழத்தின் இலங்கு வடபாலின்
அருளோங்கும் பசுத்தீவாம் நெடுந்தீவு தனிலே
எழில் மேவும் செந்தமிழும்
தாள்பணியும் நெழுவினிக் கணபதியும்
விளங்கு நற்பதியினிலே
தமிழ் வளர்க்க வந்துதித்த சிவநெறிச் செல்வரே!
ஆசை மைத்துனரே!
என்அருமைத் தங்கையை
பெருவிருப்புடனே கரம்பற்றி
கிளிநொச்சி நகரை அலங்கரித்து
தேனும் பாலுமாய் நீங்கள் வாழ்ந்து
"மக்கள் சேவை மக்கள் சேவை" என்றே
மகத்தான சேவை செய்து
ஆசை மக்கள் இருவருடன்
அன்பு மழை பொழிந்த உங்களுக்கு
சட்டெனவே வந்த வருத்தம் தான்
என்னவோ மச்சானே ?

"மச்சான் மச்சான்" என்றே
அனுதினமும் தொலைபேசியில் அழைத்து
சுகம் விசாரித்திருந்தீர்களே!
எம்மவர் அனைவருமே
மாண்புறவும், மகிழ்வுறவும்
குடும்பத்தில் குதூகலித்தே இருந்து
சிரித்துச் சிரித்தே நீங்கள்
சீற்றமும் சிறிதும் இன்றி
அன்போடு அனைவரையும்
அரவணைத்த பாசமுகம்
பாதியிலே மறைந்ததேனோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையிழந்து நெஞ்சம்
உருகுதே மைத்துனரே!

பாசமுகம் மறைந்தது எங்கே
பாசக்குரல் ஓய்ந்ததேனோ?
எத்தனை பேர் இருந்தாலும்
எம்மோடு அன்புடனே பழகிடத்தான்
உங்களைப் போல் யாருளரோ?
தங்கையையும், குழந்தைகளையும்
அநாதையாய்த் தவிக்கவிட்டு
கண் காணா தேசத்திற்கே
சடுதியாய் சென்றதெங்கே ?
அரனார் திருவடிக்கு
அவசரமாய் செல்வதற்கு
தப்பென்ன செய்தீர்கள் மச்சானே?
நாங்கள் செய்வதறியாது
தவித்து நிற்கின்றோம்.
ஆசைக் குழந்தைகளுக்கேற்ற
மருமக்களைத் தேடிக் கொடுத்து
பேரக் குழந்தைகளின்
பாசமுகம் காணாமல் போனீர்களோ?
கண் மூடிக் கணப்பொழுதில்
எங்கு தான் சென்று மறைந்தீர்களோ?
ஆசை மச்சானே!! போனீர்களே?
வஞ்சமில்லா நெஞ்சுடனே
கொஞ்சு மொழி பேசி
அரவனைத்த பாசக் கரங்கள் எங்கே ?
தொலைபேசிச் செய்தியை
செவிமடுத்த அக்கணமே
இடி விழுந்த செய்தியை நாம்
துடிதுடிக்க கேட்டதுமே
அனலாய் வெந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லலுற்றே வாடுகின்றோம்.
மைத்துனரே உங்கள்
மலர்ந்த முகம் மறைந்தது எங்கே ?

"தமிழ் தமிழ்" என்றே
தமிழுக்கே உயிர் மூச்சாய்
நின்று உழைத்தீர்களே!
பெயருக்கேற்றால் போல்
இல்லத்தின் இறைவனாய்
ஈடில்லாத் துணைவனாய்
பண்புள்ள மனிதராய்
ஊர் உறவெல்லாம் போற்ற
உத்தமராய் வாழ்ந்த வள்ளலே
எம்மையெல்லாம்
ஆறாத கண்ணீர்க் கடலில்
மிதக்க விட்டு சட்டெனவே
எங்கே பறந்தோடிப்போனீர்கள் மச்சானே!!
ஆற்றொணாத் துயரினிலே
துவண்டு துடித்திடும் எங்கள் அனைவருக்கும்
ஆறுதல் சொல்ல வார்த்தையில்லையே

கிராம அலுவலராக இருந்து
ஊரவர் அனைவருக்கும்
உன்னத பணிகள் செய்தே
உத்தம மாமனிதராய்
உதவிய கரங்கள் இன்று
அசைவற்றுப் போனதேனோ ?
நிலையில்லா வாழ்வு என்று
நின்ற இடம் தெரியாமல் சென்றீர்களோ?
மின்னலென மறைந்தீரோ?
மீண்டு வரமாட்டீரோ ?
கண்ணிமைக்கும் நேரமதில்
மண்விட்டு மாயமாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றீர்களே மைத்துனரே !
மதி நுட்பம் நிறைந்த
மாதரசர் நீங்கள் அல்லவா?
உங்கள் திடீர் மறைவு எம்மைத்
தீயாய் வாட்டி வதைக்கிறதே
என் செய்வோம்?
பாலமென எங்களுக்கு
பக்குவமாய் பணிசெய்து
ஆலமரமாய் நின்று
சடுதியாய் சாய்ந்தீரே மைத்துனரே!

நாம் நெறிகெட்டுப் போகாமல்
நேர்வழியைக் காட்டி விட்டு
பாவியெமைத் தவிக்கவிட்டு
பறந்துமே போனதெங்கே?
உங்கள் மலர்ந்த முகம்
மறப்போமோ எந்நாளும்
எம்மை ஏற்றமுடன் காத்து நின்றீர்களே?
ஏனின்று இவ்வுலகை
விட்டகன்று சென்றீர்கள் ?
மரணவேதனையில்
மனமிடிந்து தவிக்கின்றோம்.
வருவீரோ????

உங்கள் ஆத்மா
பசுபதீஸ்வரன் பாதங்களில் சாந்தி பெறுக!
வானுலகிலிருந்து வழி காட்டுங்கள் மைத்துனரே!

**எங்கள் இதயமுள்ளவரை**
**உங்கள் நினைவுடனே வாழும்**
**மைத்துனர் ராசா குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண சபை அமர்வில்
## அமரர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை.

" நந்தவனத்தி லோர் ஆண்டி
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தான்டி - சித்தர்
(கடுவெளிச்சித்தர்) பாடல்

ஒலிவாங்கியுள் நுழைந்து மண்டபத்துள் ஒலிக்கின்றதே!

"சொந்தமா ? இரவலா ?"
தவிசாளரின் வினா !
"இரவல்தான்"
இது பேச்சாளரின் விடை

அரசசேவையில் (நீதித்துறை) வகித்த பதவியால் வழங்கிய தீர்ப்புகளால் மக்களால் நன்கறியப்பட்ட ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவனாகவும் நிறைவான பெரும்பான்மையுடனும் அமைந்தது வடக்கு மாகாண சபை . மக்கள் எதிர்பார்ப்பு மிகப் பெரிது. இருந்தும் இவர்களால் இயன்றளவாகுதல் சாதிப்பார்கள் என எதிர்பார்த்த மக்கள் பெற்றுக் கொண்டது...... ஏமாற்றமே! அதன் வெளிப்பாடே ஆளுங்கட்சி உறுப்பினர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை பாடிய இச் சித்தர்பாடல். இவர் தவிர்க்க முடியாத ஒரு சில சந்தர்ப்பங்கள் தவிர ஏனைய எல்லாஅமர்வுகளிலும் கலந்து பங்களித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்து.

முன்பொருமுறை தோன்றி மறைந்து போன மாவட்ட சபை முறைமையை மூர்க்கமாக எதிர்த்து வந்த பசுபதிப்பிள்ளை ஏறத்தாழ மாவட்ட சபை போன்ற மாகாண சபையை எப்படி, ஏன் ஏற்றார்? மாவட்ட சபை இயங்கிய காலத்தில் தலைவரின் செயலாளராகச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாற்றிய மூத்த நிர்வாக அதிகாரி திரு. சிவதாசன் (Senior S.L.A.S) அவர்களால் தயாரிக்கப்பட்ட அபிவிருத்திகள் தொடர்பான திட்ட அறிக்கையை மேலோட்டமாகப் பாத்திருக்கின்றார். அந்த அறிக்கை மாவட்ட சபையில் - சபையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன் மாவட்ட சபைகள் முடக்கப்பட்டு விட்டன. பசுபதிப்பிள்ளைக்கு அத்திட்ட அறிக்கை முற்றாகப் பார்க்கக் கிடைக்கவில்லை. ஆனால் அடிப்படைகளைப் பலப்படுத்த கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன் படுத்தவேண்டும் என்பதில் திடமாக இருந்தார். மாகாண சபையோ ...... தனிமனிதக் கோட்பாடுகள், கூட்டுப் பொறுப்பின்மை, பிரிவினைச் சிந்தனைகள், போட்டிகள் பயன் "பொய்யாய்ப் பழங்கதையாயப்" புகைந்து போயினவே! தளம்பலில்லாத ஆளுமையும், ஆற்றலுமுள்ள தலைமை, பிறழாத நாவன்மை என்பன ஓர் இயக்கத்தின் உயிர் நாடி. அஃதமையாதவரை இயக்கம் வளர்வதும், வாழ்வதும் கேள்விக்குரியதே. இன்றைய நிலை தொடர்ந்தால் நிலைமையை நினைத்துப்பார்க்கவே முடியாது என்பது அவரது கருத்தாயிருந்தது. எதிர்காலத்தில் நிகழவுள்ள தேர்தலில் ஆற்றலும், ஆளுமையும், செயலூக்கமும் கொண்ட இளம் வேட்பாளர்களைக் களமிறக்க வேண்டும் என்று என்னிடம் கூறியவர்தான் எதிர்காலத்தில் தேர்தல் களத்தில் நிற்கப் போவதில்லையெனவும் சொன்னான். ஒரு தமிழ் தேசியவாதி தமிழ் தேசியவாதியாகவே இயற்கையடைந்தான்.

" சேவேறு மெந்தை சிவனார் திருமகனை
நாவாரப் பாடி நான் துதித்த பின்னர்
சாவை எனக்குத் தவமாய் அருளுமம்மா"
எனப் பாடிப்பாடி பரமன் பதமடைந்த
தனகோடி இராமநாதனின் பூட்டன் பசுபதிப்பிள்ளை


**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

ஐ. யாதவராசன்
சித்தப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்திருநீறான்

கோயிலும் கடலும் சூழ்ந்த
ஈழ நிலத்தே தழைத்தோங்கிய
சைவத்தின் திருத்தொண்டனாய்
நிலைத்த இருப்பினன்.

கிராம சேவகனாய்
மாகாண உறுப்பினராய்
இன்னும் எம் நெஞ்சத்தே
நிலைத்த போராளியாய்
நிலம் காக்கும்
இனம் காக்கும் பணியினன்.

முதுமையெனில் மாறாட்டம் வரும்
மறதி வரும்
சோர்வும் ஓரிடத்து உறைவும் வரும்
ஆனால்
தீர்க்கமாய் குரலெழுப்பி
நெஞ்சம் முழுக்க
இனப் பணிகளை நிரப்பி
உறையாத மேகமாய் ஓடித் திரிந்த
செயல் வீரனை
நாம் ஒரு பாடமெனக் கொள்வோம்
நாம் ஒரு நாயகனெனக் கொள்வோம்.

இளையவர்கள் தோற்கும்
வேக ஓட்டத்தில்
வேலைகள் முடிக்கும்
முதுமை அறியாத வேக நதி.

நெற்றி நிறைந்த திருநீறு
முகம் முழுக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பழுக்கற்ற சிரிப்பு
அன்புச் சொற்களால்
நலம் விசாரிக்கும் வெண் நேசம்

கோயிலே வாழ்வெனப் பணிந்து
சுடரும் தேவாரங்களில்
தன் முகம் நனைத்து
தெய்வத்திற்கு தன்னை அளித்த மலர்

உருத்திரபுரீச்சரத்தின்
நாகலிங்கப் பூக்கள் தேடும்
உம் முகம்
சிவனின் பாதங்களில்
பணியாய் வாசனை வீசும்

கிளி நகர் கண்ணன் கோயில் மணி
தேடும் உம் திவ்வியக் குரல்
பரந்தாமனின் பாதார விந்தங்களில்
திருப்பாசுரங்களாய் ஒலிக்கும்

சைவமும் தமிழும்
தம்மிரு கண்களாய் கொண்டவர்
எங்கு செல்வது?
நம் மொழியில் இனிப்பர்
நம் தெய்வங்களுடன் கலப்பர்

நேற்று நம் நகரில் கண்ட முகம்
இன்றும்
அந்த வேகமோட்டார் வண்டி
விலகிச் செல்லுமாற் போலொரு நினைவு

கார்த்திகை மாதத்தில்
மாவீரர் துயிலும் இல்லத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விளக்கேற்ற ஓடி ஓடி
பணி செய்யும்
அந்தக் கால்களின் ஓசை
இன்னுமும் கேட்கிறது

வெண்கலச் சத்தத்துடன் சிரிப்பு
தோள்களை தட்டி
உரிமை கொள்ளும் பேச்சு
முப்பொழுதும்
இனத்தின் விடியலுக்காய்
ஒலித்த குரல்.

"தம்பி இந்தக் கதையைக் கேளும்"
நம் நகரில் கேட்கிறது
ஓய்வும் உறக்கமுமற்ற உம் தெய்வீகக் குரல்.

காற்றோடு கலந்துவிட்ட பிறகும்
துயிலும் இல்லக்
கல்லறைகளிடையே
மம்மல் பொழுதில்
எம் வீரர்களுக்காய்
விளக்குகளை ஏந்தியபடி
கண்களில் ஒளிரும் வெண்நீறான்

கவிஞர். தீபச்செல்வன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்
# Sri Menadchi Amman Temple

ஜெயந்திநகர் கிளிநொச்சி. Reg No / பதிவு இல } HA/5/KL/04 Reg Date / பதிவுத் திகதி } 30.06.1993 Jeyanthinagar, Kilinochchi.

........ தலைவர் /President ........ செயலாளர் /Secretary ........ பொருளாளர் /Treasurer

திகதி:......./......../20........

## உத்தம புத்திரனே சென்று வா !!!!

***சம காலத்தின் சைவசமய காவலன் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை***

*திரு மகனே ஐயா!*
ஜெயந்தி நகர் ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவராக **96** இன் முன் பொறுப்பேற்று இடம் பெயர்ந்து சென்ற நிலையிலும் ஆலய பெறுமதியான பொருட்களை தலைமேல் சுமந்து சிறிதளவேனும் குறைவில்லாமல், பழுதில்லாமல் கொணர்ந்து சேர்ப்பித்தீர்....

மீண்டும் ஆலயம் புதுப்பொலிவுடன். திருப்பணி வேலையிலும் வருடாந்த மஹோற்சவத்தையும் மிகச் சிறப்புடன் இனிதே நிறைவேற்றிய அப்பழுக்கற்ற சைவத்தின் காவலனை காலனவன் கவர்ந்து சென்றதேனோ ? வாழுங்காலம் போதுமென்று சளைக்காத தமிழ் உணர்வின், தமிழ் மண்ணின் உத்தம புத்திரன் ஓய்வெடுக்கின்றார் சென்று வாருங்கள் ஐயா!!!

நாமும் எமது கணக்கு முடிய - உம்முடன் கலந்திருக்க வருவோம் ஒரு நாள். காற்று வெளியடையே சமயப் பணியாற்ற.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவச் செம்மல்
# கௌரவ சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா

எனது மனதில் என்றும் மறக்க முடியாத மகத்தான மாமனிதன். அன்பின் தனியூற்று. அறிவில் தெளிவு. பட்டறிவு. திருநீற்றின் மகிமையையும், சைவத்தின் பெருமையையும் எடுத்துக்காட்டும் பண்பாளர். சமயநெறிதனை ஆராய்ந்து, அறிந்து செம்மைப் படுத்தப்பட்ட தலை சிறந்த தலைவர், நல்வழிகாட்டி, இவர் மாவட்டத்திலும், பரந்துபட்ட வன்னி மாவட்டங்களின் பலபகுதிகளில் சமயப்பணி, தமிழ்பணி, சமூகப்பணி என கிளிநொச்சி அயராது மக்களுக்காகப் பணியாற்றிய மகத்தானவர் எங்கள் பசுபதி ஐயா!

**" எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்**
**திண்ணியராகப் பெறின்"**

வரலாற்றுத் தொன்மைவாய்ந்த எமது கிளிநொச்சி உருத்திரபுரநாயகி உடனுறை உருத்திரபுரீசுவரர் சிவாலயத்தின் தலைவராக, அறங்காவலர் சபைத் தலைவராக இருந்து ஆலயத்தின் புனராவர்த்தன கும்பாபிசேக நிகழ்வினை, சிவத்திருப்பணியை முழுமைப்படுத்திய மகத்தான மனிதன் சைவப்பழம் என்றே போற்றுகின்றேன்.

எமது சிவாலயத்தின் **"ஆதி சிவன் மலை"** தொல்பொருள் திணைக்களத்தால் அகப்படுத்த வந்தபோது தொல்லியல் திணைக்களத்தையும் பௌத்த பிக்குகளையும் எதிர்த்து மக்களுடன் மக்களாகப் போராடி சிவன்மலையைப் பாதுகாத்தவர் எங்கள் பசுபதிப்பிள்ளை ஐயா என்பது சிறப்புக்குரியதாகும். பொது அமைப்புக்களில் பல புலங்களைத் தொட்டு நின்று மக்கள் பணியை ஆற்றியவர். உருத்திரபுரம் சிவனுக்கு கும்பாபிசேக குடமுழுக்கை 17குண்டம் வைத்து மாவட்டத்திலே சிறப்பாக குடமுழுக்கு செய்த மகத்தான மனிதன் எங்கள் பசுபதி ஐயா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி கண்ணன் கோவில், ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் கோவில் போன்ற மூன்று ஆலயங்களை புனருத்தாரனம் செய்து குடமுழுக்கும் செய்துள்ளார் என்பது சிறப்பாகும்.

எமது ஆலயத்தின் அறங்காவலர் சபையைத் திறம்பட நடாத்திய பெருமையையும் இவரையே சாரும். இவருடைய சேவையை யாராலும் என்றும் நிரப்பமுடியாது. ஐயாவின் திருமுகம் எப்போதும் சைவத்தையும், தமிழையும் வெளிக்காட்டும். அவ்வாறான அடையாளம் அவரையே சார்ந்ததாக உள்ளது.

எமது ஆலயத்தின் கட்டட வேலைகள், உலோகவார்ப்பு வேலைகள், சிற்ப வேலைகள், வர்ணப்பூச்சு வேலைகள், சுற்றுப்புற சுத்தம், ஆலயத்தின் பூசை ஒழுங்குகள், வயல் காணி குத்தகை ஒழுங்குகள் எல்லாவற்றையும் திறம்பட நிர்வகித்த சிவத் தொண்டன் எங்கள் ஐயா. இவருடைய சிவப்பணி, சமூகப்பணி, தமிழ்ப்பணி வளர்க்க ஒத்தாசை புரிந்த அவரின் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள் யாவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன். எல்லாம் வல்ல உருத்திரபுரீஸ்வரப் பெருமானின் பாதங்களைப் பணிகிறேன்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

பணிவுடன்
திரு. முத்துராசா கமலக்கண்ணன்
(ஆசிரியர்)
செயலாளர்
உருத்திரபுரநாயகி உடனுறை
உருத்திரபுரீசுவரர் சிவாலயம்
உருத்திபுரம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். உயர்திரு. சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்களின் நீங்காத நினைவுகள்

அமரர் உயர்திரு. சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்களை நான் அறிந்தவனாக இருந்தாலும் அவருடன் நெருங்கிப்பழகியது 2013 மாகாண சபைத்தேர்தல் காலத்திலே அதைத் தொடர்ந்து அவர் மாகாணசபை உறுப்பினர் ஆகியதிலிருந்து அவர் இயற்கை எய்திய காலம் வரை அவருடன் சகல விடங்களையும் பகிர்ந்து வாழ்கின்றவனாக இருந்தேன்.

அவர் மீது எனக்கு ஏற்பட்ட ஈர்ப்பு அவர் நெற்றியில் பூசிய திருநீறும், நறுக்குத் தெறித்தால் போல் பேச்சும் வெளிப்படைத் தன்மையும், நேர்மையும், ஒழுக்கமும், உபசரித்தலும் அநியாயம் என அறிவதில் நியாயமான கோவத்தையும், கோவத்திலும் மலர்ந்திருக்கும் முகத்தையும் இன்றும் என்றும் என் மனக் கண்முன் தோன்றிக் கொண்டே உள்ளது.

எமது விவசாய சமூகத்தின் மீது அவர் கொண்டிருந்த கரிசனைகள் அளப்பரியது. இரணைமடுக்குளம் அபிவிருத்தி செய்வதற்கு முன் ஏற்பட்டிருந்த தடைகளை அகற்றுவதற்கு அவர் தந்த ஆலோசனைகள், வழிகாட்டல்கள் எமக்குப் புதிய உற்சாகத்தினைத் தந்து தொடர் செயற்பாட்டில் ஈடுபடுத்தியது. அபிவிருத்தியின் பின்னரும் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக வடக்கு மாகாண விவசாய அமைச்சருடன் இணைந்து செயற்பட்டார்.

நான் 2018இல் பிரதேச சபை உறுப்பினராகத் தெரிவான பின்னர் எனது இராமநாதபுரம் வட்டாரத்தின் வீதி அபிவிருத்திக்காக நிதிகளை ஒதுக்கித் தந்து என்னை அரசியல் சமூகப்பணிகளில் வழிகாட்டி உற்சாகமூட்டினார். அவர் அரசியல் வாழ்வில் எவ்வாறு வாழ்ந்து காட்டினாரோ அவ்வாறான வாழ்வை இன்னொருவரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து காட்ட இயலுமா என்பது சந்தேகமே. **"ஐயா"** என்ற அடைமொழியை பெற்ற அம் **"மாமனிதனின்"** பற்றுறுதி மிக்க வாழ்க்கையை எண்ணி வியந்த எமது கரைச்சிப் பிரதேச சபையும் 2022இன் பண்பாட்டுப் பெருவிழாவில் அவரின் அரும் பெரும் ஆன்மீகப்பணியைக் கௌரவித்து அவரை பெருவிழா அரங்கிற்கு அழைத்து பாராட்டி மகிழ எண்ணிருந்த வேளையில் இறைவனின் பேரருள் தன் தொண்டனுக்கு **"சிவபதப் பேறு"** அளித்து தன்னுடன் சேர்த்துக் கொண்டார். மரணம் வலியைத் தந்தாலும் பசுபதி ஐயா பெற்ற சிவபதப்பேறு நாம் பெறுவது அரிதே!

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

**மு. சிவமோகன் - J.P**
**பிரதேச சபை உறுப்பினர்,**
**இராமநாதபுர வட்டாரம்**
**செயலாளர் - இரணைமடுக்குள**
**கமக்காரர் அமைப்புகளின் சம்மேளனம்**
**கிளிநொச்சி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுத்தீவின் கூட்டாளியும் பண்பாட்டின் போராளியுமான பசுபதிப்பிள்ளை ஐயா அவர்கள்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்ந்தும் காட்டினார். ஊரக சேவையைத் தேடிய செல்வம்.

பசுத்தீவின் கூட்டாளி. பண்பாட்டின் போராளி. பசுத்தீவின் மேற்குப் பகுதியில் அமரர்கள் சுப்பிரமணியம் தெய்வானைப் பிள்ளை இணையரின் மூத்த புத்திரனாய்ப் பிறந்தவர். பாலர் பருவம், பள்ளிப்பருவம், கல்லூரிப்பருவம் அக்காலத்திலேயே தன்னடக்கம், நல்லொழுக்கம், நற்பண்பு, சுறுசுறுப்பு, உற்சாகம், அன்பு, நேர்மை, பொறுமை ஆகிய விவேகானந்தரின் அறிவுரைகளுக்கமைய வாழ்ந்தும் காட்டினார்.

இவர் தனது பதின்ம வயதினிலேயே தனது குடும்ப நிலையைக் கண்டு அச்சுமையைத் தன் தலைமேல் சுமந்து கொண்டு பாண்டியன்குளம் எனும் திவ்விய சேத்திரத்தில் வந்து தனது தகப்பனாருடன் அமர்ந்து செயற்படத் தொடங்கினார்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகம், பாண்டியன் குளம் அப்பகுதியின் ஒரு பகுதி. அங்குதான் அதை அமைப்பது உகந்தது என திரு. செல்லத்தம்பு ஐயா, பராளுமன்ற உறுப்பினர், முல்லை மாவட்டம், தமிழரசுக்கட்சி அவர்களுக்கு உணர்த்தி அங்கு அமைய ஆவன செய்தோம்.

பாண்டியன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக பாடசாலை வளாகம் துப்புரவு செய்ய வேண்டி இருந்தது. இங்குள்ள மக்களைக் கொண்டு சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமித்தல் தொடர்பில் பல தடவைகள் முல்லைத்தீவு சென்று ஆசிரியர்களின் கஸ்டங்களைக் கூறி அதிகாரிகளுக்கும் செல்லத்தம்பு ஐயாவிற்கும் விளங்கப்படுத்தி அதற்கும் ஆவன செய்தோம்.

பாடசாலை A/L வரை தரம் உயர்த்தப்பட்ட காலத்தில் பல சிரமங்களுக்கு முகம் கொடுத்து அதையும் நிறைவு செய்தோம். **"மக்கள் சேவையே மகேசன் பணி"** என இச் சமூகத்திற்காக முன்னெடுத்தார். எம் மக்களின் மனதில் கூட்டணி பசுபதியென நீங்காத இடம் பெற்றார்.

கிராம அலுவலராகக் கடமையேற்றபோதும் இடப்பெயர்வு தந்த இழப்புகளின் வலி சுமந்நதிருந்த மக்களின் மனமார்ந்த கிராம அலுவலர்களாக ஓய்வில்லாத, மகத்தான மக்களின் பணி எல்லைகளைக் கடந்தும் கரம் விரிந்தது. அவரது மனிதநேய செயற்பாடுகளால் அவரை மக்கள் ஆணை வடமாகாண சபை உறுப்பினராக மாற்றியிருந்தது.

அரசியற் பாடத்திற்கு அர்த்தமும் வகுத்து வாழ்ந்தும் காட்டினார். அவரே சொன்னார் **"அரசியல் என்பது நாம் மக்களுக்கு சேவை செய்யும் அஸ்திரம்"** என்றும் **"பாதை தப்பினால் சுயநலம் எனும் அரக்கன் எமை ஆட்டி வைப்பான்"** என்று அன்று வடமாகாண அமர்வின்போது மன்னர் மகளுக்கு மாப்பிள்ளை பார்த்த கதையைச் சொல்லி அரசியல் வாழ்வின் அர்த்தமதை உலகமே உணர வைத்தவர்.

அதன் விளக்கம் அரசர் தன் மகளுக்கு எல்லா திறமைகளும் நூறு வீதம் இருப்பவராய் பார்த்து வரும்படி மந்திரிமாரை அனுப்பிவைத்தார். எல்லோரும் "அது முடியாது" எனக் கூற ஒருவர் எழுந்து தொண்ணூற்று எட்டு வீதம் உள்ள ஒருவன் இருப்பதாக கூறினாராம். அரசர் "இரண்டும் எது இல்லை" எனக் கேட்க, அவர் "அவருக்கு சொல்வார் புத்தியும் இல்லை தன்புத்தியும் இல்லை" என்று கூற அரசரும் மகளுக்கு அவரைத்தான் மணம் முடித்து வைத்தாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த ஓர் அமர்வில் நாம் எப்படி வாழ்கூடாது என பாடியும் காட்டினார்

**" நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன்**
**நாலாறு மாதமாய் குயவனை வேண்டி**
**கொண்டு வந்தான் ஒரு தோண்டி அதைக்**
**கூத்தாடி கூத்தாடி போட்டு வைத்தான்டி"** -சித்தர் பாடல்

பாரதி சொன்னபடி மக்கள் சேவையே தேவர்கள் வேள்வி என என்னில் அடங்காத வேள்வியும் செய்தவர். கல்வித் தரத்தை உயர்த்தவும் மேம்படுத்தவும் பாண்டியன்குள பாடசாலைக்கு பேரொலிக்கருவி ( பாண்ட் வாத்தியங்கள்) , சரஸ்வதி சிலை வைத்து வணங்கிடவும் வழியமைத்தவர். பாடசாலை ஆசிரியர்கள் தங்க கட்டட வசதிகள் இல்லாதிருந்தை உணர்ந்து ஐம்பது லட்சம் ரூபா செலவில் கட்டடமும் அமைத்துக் கொடுத்தவர். அவரது அர்ப்பணிப்பின் உயரம் கண்டு வியக்காதவர் இல்லையெனலாம்.

இவரது சேவையில் ஆன்மீகம்கூடத் தப்பவில்லை. இங்குள்ள மூன்று ஆலயங்களின் தலைமை ஏற்று திருப்பணியினை இராஜ இராஜ சோழன் போல் நிறைவேற்றினார். தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் வந்து தீண்டியபோது சீறிப்பாய்ந்து விடாது போராட்டம் செய்து வெற்றியும் கண்டார்.

குடும்பத்தார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அறங்காவலர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் எனது அனுதாபங்களையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

அன்பிற்குரிய நண்பன்
மு. கார்த்திகேசு (கார்த்தி மாமா)
முன்னாள் பனங்காமம் பற்று பல நோக்கு கூட்டுறவுத் துணைத் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் நலனுக்காக எதையும் விட்டுக்கொடுக்காத மாமனிதன்

அமரர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை அவர்களின் தொடர்பு முப்பது வருடங்களுக்கு முன் எனக்கு ஏற்பட்டது. ஒரு கம்பீரமான கிராம அலுவலராக கரைச்சி பிரதேச செயலகத்திற்கு பணிபுரிய வந்தபோது முதலில் அவரை அறிந்து கொண்டேன். போரும் போர் கொடுத்த நெருக்குவாரத்தில் நிறைந்திருந்த அக்காலப்பகுதியில் மக்கள் பணி என்பது தன்னைக்காத்து, தப்பிப்பிழைத்தல் என்பதாக இருந்தது. அந்தப்பணியில் அவர் எங்களோடு வீரமாக செயற்பட்டார், பின்னர் போராட்டம் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும் என்ற செயற்பாடுகளில் அவர் முன்னோடியாகச் சென்று ஒரு வீரிய செயற்பாட்டாளராக ஆற்றிய பணிகளின் போது அவருக்கும் எனக்குமான பணிகள் அதிகம் இருந்தது.

நெடுந்தீவில் இருந்து வன்னியில் குடியிருந்த மக்களில் சிறப்புக்கவனம் செலுத்தும் விதமாக பசுந்தாரகை சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கத்தை ஆரம்பிக்கும் போது அதில் முன்மாதிரியாக செயற்பட்ட பத்து உறுப்பினர்களில் அவரும் ஒருவராக இருந்தார். இந்த அமைப்பின் நோக்கத்தை வெற்றி கரமாக்குவதில் அவரது உற்சாகமும் துடிப்பும் இன்னமும் எனக்கு நினைவிருக்கின்றது. அந்த அமைப்பின் மாதாந்தக் கூட்டங்களை ஒவ்வொரு அங்கத்தவர் வீட்டில்தான் வைக்கவேண்டும் என்பதனை அமுலாக்கிக் காட்டியும் இருந்தார். இறுதிவரை என்னோடு இணைந்து உபதலைவராக செயற்பட்டுக் கொண்டே இருந்தார்.

குருகுலபிதா கதிரவேலு அப்புஜி இவர்களுக்கு ஒரு சிலை ஒன்றுகூட அமைக்கப்படாது இருந்த நிலமையை அடிக்கடி குறிப்பிட்டு போர்க்காலத்திலேயே அவரின் நினைவாக அவரின் ஆத்மார்ந்த நண்பன் ராஜரட்ணத்தடன் இணைந்து "நினைவழியாப் பெருமனிதன்" என்ற நூலை உருவாக்கி தானும் இணைந்து அதனை வெளியிட்டு வைப்பதற்கு என்னை முன்னிலைப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் அவருக்கான உருவச்சிலையை குருகுல வளாகத்துக்குள் அமைக்க வேண்டும் என ஆலோசனை தந்து அதற்காக **"அப்புஜி கதிரவேலு நினைவுப் பணிமன்றம்"** என்ற அமைப்பை உருவாக்கி அதன் தலைமைத்துவத்தையும் எனக்கு வழங்கியதோடு சிலை நிறுவுவதில் அயராது பாடுபட்டு அந்த பெருமனிதனுக்காக முதலாவது சிலையை குருகுல வளாகத்தில் நிறுவ மூலகாரணமாக இருந்தார்.

தீவிர அரசியல் செயற்பாட்டாளராக மாறியிருந்தாலும் கூட சமூகப்பணிகளின்போது அவற்றைக் கருத்தில் எடுக்காது சமூக நன்மைக்காக அவரது செயற்பாடுகள் அமைந்திருக்கும். மாகாண சபை உறுப்பினர்களின் செயற்பாட்டிலிருந்த காலப்பகுதியில் என்னுடைய அலுவலகத்திற்கும், வீட்டிற்கும் தன்நண்பர் ராஜரட்ணத்துடன் இணைத்து வந்து எல்லா விடயங்களுடனும் கலந்து ஆலோசிப்பதைப் பார்த்து நான் சங்கடப்பட்டுள்ளேன் . தளராத உழைப்பும் விட்டுக்கொடுக்காத இறுமாப்பும் கொண்ட ஒரு நல்ல தலைவராக அவரை மதிப்பிட்டு அவரிடம் இருந்த பல விடயங்களைக் கற்றுக் கொண்டுள்ளோம். சமூக அநீதிக்காக உரத்த குரலில் அவர் எந்தத் தலைவரையும் கடிந்து கொள்வதைப் பார்க்கின்ற போது நான் நல்ல தலைமைத்துவ ஆளுமையைக் கற்றுக் கொண்டிருக்கின்றேன்.

காணும் இடம் எல்லாம் ஒரு புன்சிரிப்பும் 'தம்பி' என்னும் வார்த்தை எனக்குள் இன்னமும் நிழலாடிக் கொண்டிருக்கின்றது. ஒரு வீரியம் மிக்க மண்ணையும், மக்களையும் நேசித்து மக்கள் நலனுக்காக எதையும் விட்டுக் கொடுக்காத இன்னும் ஒரு நினைவழியாப் பெருமனிதராக நான் அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்திற்கு ஆறுதலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**அமரசிங்கம் கேதீஸ்வரன்,**
**உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,**
**மாவட்டச்செயலகம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தின் பசுந்தாரகை தொழில்முனைவோர் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கத்தின் இரங்கல் செய்தி.

கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்பட்டு வரும் தொழில் முனைவோரை மையப்படுத்திய ஒரேயொரு கூட்டுறவுச் சங்க அமைப்பான பசுந்தாரகை தொழில் முனைவோர் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கத்தின் உபதலைவரான திரு.சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை அவர்கள் இச்சங்கம் உருவாக்குவதில் 2005ஆம் ஆண்டில் ஆரம்ப கால உறுப்பினரின் ஒருவராக செயற்பட்டார். அதன் தற்போதைய உபதலைவராகவும் இருந்து வருவதுடன் இந்த அமைப்பினால் பல்வேறு தொழில் முனைவு அபிவிருத்திக்கான நிதிகளைத் திரட்டுவதிலும் வருடாந்தம் அங்கத்தவர்களின் நலன் மேம்பாட்டுக்காக பல்வேறு செயற்றிட்டங்களை உருவாக்குவதிலும் உப தலைவரின்பங்கு காத்திரமானதாகும். 2005ஆம் ஆண்டு கிளிநொச்சியிலிருந்து முழுமையாக இடம்பெயர்ந்து ஸ்கந்தபுரம் பகுதிக்கு மக்கள் நகர்ந்துள்ள வேளை உறுப்பினர்களும் முழுமையாக இடம்பெயர்ந்துள்ள சூழலில் மணியம்குளம் பகுதியில் பசுந்தாரகை உறுப்பினர்களுக்காக குடியிருப்பொன்றை உருவாக்கிக் கொள்வ தற்காக முக்கியமான பணிகளை ஆற்றினார். மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் செயற்படாத இந்த சங்கத்தை புனரமைப்பு செய்து இயங்க வைக்க வேண்டுமென்பதில் அதிக கரிசனை காட்டினார். எங்களுடைய அமைப்பினுடைய செயற்பாட்டு நிதியைப் பயன்படுத்தும் போது இவ்வாறான இறுக்க கட்டுப்பாடுகளைக் கடைபிடிக்க வேண்டுமென்பதை அவர் எங்களுக்கு உறுதியாக எடுத்துரைப்பார். இன்றைக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் உற்சாகத்தில் இயங்கும் சங்கங்களில் ஒன்றாக இத்தொழில் முனைவோர் கூட்டுறவு சங்கத்தை செயற்படுத்துவதில் அவர் ஆற்றிய பங்கை நாம் நன்றியோடு நினைவு கூர்ந்து அவருக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்திக் கொள்கின்றோம்.

தலைவர்
பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்
அங்கத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்த மனத்தினர் இறவாப் புகழாளர்
# அமரர். திரு. சு. பசுபதிப்பிள்ளை அவர்கள்.

தவறு கண்டபோது **"நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே"** யென முகத்திற்கு நேரே சுட்டும் நக்கீரர் வாழ்வழியில் வாழ்ந்த தன்மையர் அமரர் சு. பசுபதிப்பிள்ளை அவர்கள். தன்னலப் பேர்வழிகளுக்கும், பைந்திர(பிரதேச)வாதம் பேசும் பிற்போக்காளர் களுக்கும் புத்தி புகட்டவும் அவர் தவறவில்லை. தான் பிறந்த, வாழ்ந்த மண்ணின் மக்களுக்காய் தன்னை ஈகையாக்கி வாழ்ந்தவர். தான் பிறந்த மண்ணின் வாசனையோடு இறுதிவரை வாழ்ந்தவர். இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த, உலகவாழ்வியல், மெய்யியல் தந்த வள்ளுவர் பெருமான் இவர்பற்றி குறள் தந்திருக்கின்றார் என்று கூறிடின் அதுமிகையாகாது.

**நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்**
**குலத்தின்கண் ஐயப்படும்**
*(கு.958)* என்கிறார் வள்ளுவனார்.

இங்கு நலமென்றது, ஒருவன் தன் தாய்மொழி, தன்னினம், தான் பிறந்தமண் போன்றவற்றில் பற்றின்றி(நாரின்மை) இருப்பானாகில் அவனது பிறப்பானது தூற்றுதலுக்கு(ஐயத்திற்கு) உரியதென வசை கூறுகின்றார். இக்குறள் கூறும் ஐயப்பாட்டினைத் துடைத்தெறிந்து தன்மொழிக்காய், தன்னினத்திற்காய், தன்மண்ணிற்காய் தன்னுயிரைத் துச்சமென மதித்து **"துணிந்தவனுக்கு தூக்கு மேடை பஞ்சுமெத்தை"**யென வாழ்ந்து காட்டிய மாமனிதர் அமரர் திரு. சு. பசுபதிப்பிள்ளை அவர்கள். தமிழர் பகுதிகளில்(வடகிழக்கு) மக்களுக்கு ஏற்படுகின்ற இடர், இன்னல்களால் ஏற்படுகின்ற உடனடித் தேவைகளை நிறைவாக்க களத்தில் இறங்கிச் செயற்படும் அஞ்சா நெஞ்சன்.

இவர் திருநீற்றுச் சுப்பிரமணியத்தின் மகனாகப் பிறந்ததாலோ என்னவோ அமரரின் நெற்றியில் திருநீற்றுப் பட்டையுடன், நடுவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தன, குங்குமப் பொட்டுடனும், வெள்ளைச்சீருடையிலும் என்றும் காணப்படுவார். இவர் ஒரு சைவப்பெருமகனாக, சிவத் தொண்டனாக கடைசிவரை வாழ்ந்துவந்தார். இலங்கை அரசு தொல்லியல் ஆய்வு என்னும் போர்வையில் தமிழர்கள் பெருங்கற்காலத்தில் (பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேல்) இருந்து வாழ்ந்துவரும் கிளிநொச்சியின் பெருநிலப்பரப்பைக் கையகப்படுத்தவும், அங்கு புத்தகோயில் இருந்ததெனக் காட்டவும், தொடர்ந்து பெரும்பான்மையைக் குடியேற்றலாம் என்ற உள்நோக்கோடும், சிவநகர் சிவாலயப் பகுதியில் அகழாய்வு செய்ய முற்பட்டபோது அதைத் தடுத்து நிறுத்திய ஆண்மையர் அமரரவர்கள். அசோகன் காலமான கி.மு 3ஆம் நூற்- தொடங்கி கி. பி. 3ஆம் நூற். வரையில் பௌத்தம் நாவலம்தீவு(இந்தியா, இலங்கை, பாகிச்த்தான் போன்றன) முழுவதும் பரவியிருந்தது என வரலாற்று ஆய்வுகள் கூறினாலும் இலங்கையில் சிங்கள மொழியின், சிங்கள இனத்தின் தோற்றம் கி.பி.10ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதே(இதை பாளி, சமற்கிருத, தமிழ், நூல்கள் சான்று பகரும்). இம்மூன்று மொழிகளின் கலப்பே சிங்களமொழி (ஆய்வுக்குரியது).

**"மனநலம் மன்னுயிர்க் காக்கும் இனநலம்**
**ஏல்லாப் புகழும் தரும்"**

(கு.457). என்பார் வள்ளுவப் பெருந்தகை.

வள்ளுவனார் கூறுவதெல்லாம் நீ எப்படி வாழவேண்டும் என்பதும் அயலவனோடு, உலகத்தோடு எப்படி வாழவேண்டும் என்பதும்தான். அமரரவர்கள் தன் வாழ்நாளின் பெரும்பகுதியை மக்கள் தொண்டிற்காக நீதி, நேர்மை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் ஊழல், மோசடியற்ற வினைத் திட்பத்துடன் கூடிய செயல்களைச் செய்து வள்ளுவன் கூறுவது போல் மக்கள் நடுவில் தனக்கான பெரும் புகழை நிலைநாட்டியுள்ளார். பலரும் மக்கள் தொண்டே மகேசன் தொண்டென்பார்கள். ஆனால் அமரரவர்கள் இரண்டையும் தனது இறுதி மூச்சுவரை சமநிலையில் செயற்படுத்தியுள்ளார். யெயந்திநகர் மீனாட்சியம்மன் கோயில், திருநகர் கண்ணன் கோயில், சிவநகர் சிவன் கோயில் போன்றவற்றின் தலைவராயிருந்து, அக்கோயில்களின் ஆட்சிக் குழுக்கள் நேர்மையாகச் செயற்பட நெறிப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டியவர். "வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தும் ஏசும்"என்பது தமிழ்ப்பண்பாட்டின் ஒரு இழி கூறாய் இருப்பதால் பொறாமையும், காழ்ப்புணர்வும் கொண்டவர்கள் வீண்பழிகளைச் சுமத்தவும் வெட்கம் கெட்டவர்கள் வெட்கப்பட மாட்டார்கள் என்பதும் நாம் கற்றுக்கொண்ட பாடங்கள்.

மூவாயிரம் தமிழ்தந்த திருமூல நாயனார் தனது திருமந்திரத்தில்

**"ஒன்றே குலம் ஒருவனே தேவன்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகும் கதியில்லை நும்சித்தத்து**
**நன்றே நிலைபெற நினைந்து உய்மின்!"**

இங்கு மனிதனால் மனிதன் பல சாதியாக, பலசமயத்தாராகப் பிரித்து அவனது ஆற்றலைப் பலவீனப்படுத்த கூறுபோட்டிருப்பதைச் சாடி நீங்கள் யாவரும் ஒருவர்தான், உங்களை வழிநடத்துவதும் ஒரே ஆற்றல்தான், ஆகையால் நல்லதை நினையுங்கள் காலன் (நமன் - யமன்) என்று ஒன்றில்லை, பயப்படவேண்டாம். நீங்கள் வீடுபேற்றை, மறுமையைப் பெற்றுக்கொள்வீர்கள் என நினைக்கவேண்டாம், எனவே இவ்வுலகில் நல்லவை நிலைபெறச் செய்வதால் மட்டுமே உங்களுக்கு உய்வுண்டு என்கிறார். அமரரின் வாழ்வு இப்படியாகத் தான் இருந்தது. அவர்காலனைக் கணக்கில் எடுக்கவில்லை, மரணத்திற்குப் பயப்படவில்லை, தான் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் கிடக்க விரும்பவில்லை, தன் உறவுகளை, உற்றாரை துன்பப்படுத்த நினைக்கவில்லை, அவரின் நிலையை மருத்துவர்கள் கூறியும் அதைத் தட்டிக்கழித்தார். தனது கடைசி மணித்தியாலங்கள் வரை உந்துருளியில் ஓடிக்கொண்டிருந்தார், கடைசி நிமிடம் வரை பேசிக்கொண்டிருந்தார்.

இன்று அரசிடமோ, அரசுசார்பற்ற நிறுவனங்களிடமோ எவ்வித வெளிப்படைத் தன்மையில்லை. இதனால் அனைத்து நிலைகளிலும் ஊழலும், மோசடியும், பக்கச்சார்பான செயற்பாடுகளும் மலிந்து காணப்படுகின்றன. இவர்களுக்குப் பின்னால் சென்றால் பட்டங்களும், பதவிகளும். நேர்மையாளருக்குக் கரிப்பூச்சும், புறக்கணிப்பும். எல்லா நிலைகளிலும் இம்மோசடிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரருக்கு எதிராக அஞ்சா நெஞ்சனாக போர்க்கொடி உயர்த்திப் போராடினவர். தமிழர்தம் மொழியுரிமை, இனவுரிமை, நிலவுரிமை கேட்டு அரச ஆளுமைகளுக்கு எதிராகவும் செயல் மறவனாகச் செயற்பட்டு மக்களின் மனங்களில் நீங்கா இடம்பிடித்தார். மக்கள் தொண்டனாக, ஊரக(கிராம) அலுவலராக, வடமாகாணசபை உறுப்பினராக, இறைதொண்டனாக, சித்தராக இறவாப் புகழாளரானார். அவர் என்றும் வாழ்வார்.

**நிலவரை நீழ்புகழ் ஆற்றின் புலவரைப்**
**போற்றாது புத்தேளிர் உலகு** *(கு.234)*

தன் வாழ்நாள் முழுவதும் ஒருவன் தான் வாழும் இடங்களில் நேர்மையாக வாழ்ந்து அந்த மக்களுக்கு வேண்டியவற்றை மனம்கோணாது செய்வானாக இருந்தால், பொத்தகப் பூச்சிகளாய் இருக்கும் கல்வியாளர்களைப் போற்றாது அந்த நீள்புகழுக்குரிய அத்தொண்டனையே மக்கள் போற்றுவர் என்கிறார். வாழ்க இறவாப்புகழாளர் அமரர் திரு.சு. பசுபதிப்பிள்ளை அவர்களின் பெயர்!

ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரின் துணைவியார், பிள்ளைகள், மருமக்கள், உடன்பிறப்புக்கள், மைத்துனர்மார், மைத்துனிமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அனைவரும், உடல்உள அமைதிபெற இயற்கையை இறைஞ்சி நிற்போம்.

**அமைதி! அமைதி!! அமைதி!!!**

நா.வை.குமரிவேந்தன்(மகேந்திரராசா), ச.நீ.
உறுப்பினர், வடமாகாண பண்பாட்டு ஆலோசனைக் குழு.
நிறுவநர், இலங்கைக் குமரித் தமிழ்ப்பணி மன்றம்,
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருத்திரபுரீசுவரர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும், தமிழையும், சைவத்தையும் இரு கண்ணெனக் காத்த அமரர் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்கள்.

தனக்கென்று வாழாத தலைமகன்
தடம் பதித்து நடந்தாலும் தலைக்கனம் ஏதும் இல்லை
தலப்பணியின் அர்ப்பணிப்பில் தமை மிஞ்ச யாருமிலர்
சிவ தெய்வமே உறவாக கொண்ட உன்னத நாதன்
அண்டிவரும் பக்தர்க்கு ஆறுதல் அளிக்கும் உம்முகம்
பிறப்புக்கு அர்த்தம் போலும். நாதன் பொறுமையின் பொக்கிசம்
உந்தன் உதிரத்தில் பலர் உயர இடம் கொடுத்த சிம்மாசனம்
பகுத்தறிவு இல்லாத மனித இனம் நாதன் பக்கம் விளையாட
பார்த்திருந்து அதற்கும் பக்குவம் சொல்லிக்கொடுத்த வித்தகன்
இன்று பல ஆத்மாக்கள் லயித்து நிற்க பலவழிகள்கோலி
இன்னல் இல்லா பெருவாழ்வு எல்லோரும் வாழ வழிசமைத்தீர்
சப்தமியைத் திதியாக்கி உருத்திரபுரீசுவரரை நாடிய பசுபதிப்பிள்ளை
தசாப்தம் எத்தனையானாலும் மறையாது உந்தன் முகம்.
சிவ தெய்வமே! ஆறுதல் கொடு அவர்தம் உறவுகட்கு.
அமைதி பெறுக !ஆத்மா அடைக சாந்தி!

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

சிவஸ்ரீ. அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள்,
அகில இலங்கை சமாதான நீதிவான்,
உருத்திரபுரீசுவரர் ஆலய பிரதம குரு,
அட்ஷய தர்மபீடம், புளியம்பொக்கணை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்த் துளிகளுடன் ...........

நாகநீள் நகரமென சிலப்பதிகாரம் கூறும்
நெடுந்தீவு வேலங்காட்டு மைந்தன்
கற்பக தருவளர்ந்து வான் மூடும்போது
கண்குளிர, மனம்குளிர பனம்பழங்கள் உண்டிருந்தார்.

சீருடன் வாழ்ந்த செம்மல் எங்கள் அண்ணா
சிரிப்புடன் என்றும் தோன்றும் பிள்ளை
திருநீற்றுடன் சிவன்நாமம் காணும் அண்ணா
திடீர் என்று எங்கு சென்றார்?

தமிழின் சொத்துத்தான் நீங்கள் அண்ணா
தரணி என்றும் மறக்காது உங்கள் நாமம்
தாய் மொழிக்காய் குரல் கொடுக்கும் ஒலி கேட்கிறது
தமிழ் நெஞ்சங்களுக்கு தடைவராமல் காத்திடுங்கள்

நல் நிகழ்வா துக்க நிகழ்வா
நல்லறிஞர் அண்ணலுக்கு ஒன்றே
பெருமையுடன் கலந்து கொண்டு அண்ணா
பேருரைகள் நிகழ்த்திடுவார் எங்கும்

தாய் தந்தையராய் நிற்பதிலே என்றும்
தவறிவிடமாட்டார்கள் இணையர்கள்
தட்டுத் தடுமாறி நிற்பவரைத் தட்டிக்கொடுத்து
தலை நிமிர வைத்திடுவர் இணையர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகளுடன்
பிரியமாய் இருந்து அறிவுரைகள் கூறும் அண்ணா
பேதலிக்கும் குடும்பத்தை ஆற்றிடுங்கள்
பெருமையுடன் பிறந்து விட்டீர்கள் இன்று

தமிழா? கல்வியா? சைவமா? அரசியலா?
தன் சேவை கிராம சேவையா? அண்ணாவுக்கு
தலை நிமிர்த்திச் செய்யும் பிள்ளை
தவிக்க விட்டுச் சென்றாலும் கலக்கமின்றிச் சென்றீர்கள்.

கண்ணீரில் நாம் குளிக்க
கணப் பொழுதில் சென்றதெங்கே?

திருமதி. ஞா. பத்மநாதன்
ஒய்வு பெற்ற ஆசிரியர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மக் குரலொன்று ஓய்ந்ததே!!

கிளிநொச்சி மண்ணில் வேரோடிய விருட்சமொன்று சரிந்த செய்தி தமிழ் பேசும் அத்தனை உள்ளங்களையும் நிலைகுலைய வைத்தது. அகத்தின் தூய்மையைப் புறத்தே கொண்ட அடையாளத்திற்குரியவர். நெடுந்தீவைப் பூர்வீகமாகவும், கிளிநொச்சியை வாழ்விடமாகவும் கொண்ட தன்னலமற்ற சேவையாளன். கிளி மண்ணில் போரின் வடுக்களையும் வலிகளையும் தாங்கி இந்த மண்ணின் அவலமறிந்து ஆளுமை மிக்க கிராம அலுவலராக சேவையாற்றியவர். போர்க்காலத்தில் இங்கு வாழ்ந்த மக்களின் துயரறிந்து சேவையாற்றிய மாண்புறு மனிதர்களில் அமரர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயாவும் இன்றுவரை மட்டுமன்றி இனிவரும் காலங்களிலும் நினைவு கொள்ளத்தக்கவர்.

**2013**ஆம் ஆண்டு தமிழ் மக்களின் பேசுபொருளான அடிப்படை உரிமை மீறுதலுக்கான குரலாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வடக்கு மாகாண சபையின் உறுப்பினராக தமிழ்த் தேசியப்பற்றை நிலைநிறுத்திய ஒருவர். வேசம் இல்லாத அரசியல்வாதியாக எந்தக் களத்திலும் தன் தளர்வில்லாப் பேச்சால் தமிழினத்திற்காக குரல் கொடுத்த யதார்த்தவாதி

தமிழினத்தின் மரபுகளையும் அடையாளங்களையும் பாதுகாப்பதற்காக குரல் கொடுத்த கொள்கையாளன். இந்த மண்ணின் விடுதலைக்காக தம் இன்னுயிரை உவந்தளித்த மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகளுக்கு தடைவிதித்த அரசுக்கு அஞ்சாது துயிலும் இல்லத்தில் துணிவோடு கால் பதித்து, சர்வ தேசத்தையே திரும்பிப் பார்க்க வைத்து, தம் பிள்ளைகளை நினைத்து சுடரேற்ற வழிவகுத்த அஞ்சா நெஞ்சினன்.

அரசியல் பணியன்றி அறப்பணியிலும் கால்பதித்து கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மை மூலாதாரமாக விளங்கும் உருத்திரபுரீச்சரத்தின் அறங்காவல் சபையின் தலைவராக இருந்து சிறப்பான சேவை செய்த செம்மல். “கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்பதை உணர்ந்து உருத்திரபுரீச்சரத்தின் புனருத்தாரணப் பணிகளுக்கு தலைமையேற்று தனது வயதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்படுத்தாது ஒவ்வொரு கொடையாளிகளையும் இனங்கண்டு, வீடுதோறும் சென்று ஆலயப் பணிக்கான உதவிகளைப் பெற்றவர்.

உருத்திரபுரீச்சரத்தான் இன்று புதுப் பொலிவு பெற்று கும்பாபிஷேகத்தையும் கண்டு சைவர்களின் அடையாளமாக மிளிர தன் ஆளணியினரை ஒன்றிணைத்துப் பணியாற்றி உருத்திரபுரம் வாழ் மக்கள் மனதில் நீங்காது நிலைத்திருக்கும் சிவத் தொண்டனாக தன்னை வரித்துக் கொண்ட சிவன்பக்தன்.

இனவாதத்தை விதைத்து தமிழினத்தின் வரலாறுகளைச் சிதைக்கும் நோக்கில், உருத்திரபுரம் சிவனாலயத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி எனும் முனைப்பில் செயற்பட விளைந்த அரச படைகளையும், ஆக்கிரமிப்பாளர்களையும் அந்த இடத்தில் நிலை கொள்ளாதிருக்க உண்ணாவிரதமிருந்து மக்கள் பலரையும் ஒன்று திரட்டி தமிழினத்தின் எதிர்ப்பை வெளிகாட்டி இனவாதிகளை நெருங்க விடாது பாதுகாத்த வரலாற்றாளன்.

அரச சேவை, அரசியல், சமூக விடுதலை, அறப்பணி எல்லாவற்றையும் கடந்து சிறந்த குடும்பத் தலைவராகவும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர் பசுபதிப்பிள்ளை ஐயா.! பிறர் மனம் நோகாத அவரது துணைவி மனைத்தக்க மாண்புடையாளான யோகேஸ்வரி அக்கா சிறந்த மருத்துவ தாதியாக கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றி ஜனாதிபதி விருதையும் பெற்றுக் கொண்டவர். மூத்த மகள் மைதிலி எனது உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் சேவைக்காலத்தில் கூடஇருந்து பணியாற்றிய சிறந்த புவியியல் பாட ஆசிரியர். பிள்ளைகளோடு மென்மையாகப் பழகுபவர். யாரும் நோகாதவாறு மென்மையாகப் பேசும் இயல்புடையவர். அதே போல இளைய மகள் நிருத்திகா (உருத்திரபுரம் ம.வி ஆசிரியர்) கணினி ஆசிரியராகக் கடமையாற்றுபவர். நல்ல பண்பான பிள்ளைகளை இந்த சமூகத்திற்கு அளித்த நல்லதொரு தந்தை. ஆண்டவன் சித்தமாக அற்புதமான குடும்பத்தின் தலைவனாக வழிநடத்திய சிறந்த குடும்பத் தலைவன்.

வடக்கு மாகாண சபை உறுப்பினராக இருந்த காலத்தில் தனது ஒதுக்கீட்டு நிதிகளை சமூகப்பணிக்காக வழங்கிய கொடையாளி, உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தின் அதிபராக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானிருந்த காலத்தில் அப்பாடசாலைக்கான நுழைவாயில் ஒன்றை அமைப்பதற்காக உதவி கோரியபோது எவ்வித மறுப்புமின்றி தனது நிதி ஒதுக்கீட்டின் கீழ் மூன்றரை இலட்ச ரூபாவைத் தந்து கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் எங்கும் இல்லாதவாறு எமது பாரம்பரியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நுழைவாயிலை அமைத்து பாடசாலைக்கு புதியதொரு பொலிவை ஏற்படுத்த எனக்கு கைகொடுத்த ஒரு கொடையாளி.

மண்மீதும், தமிழ் மக்கள் மீதும் பற்றுக் கொண்டவர். நீதிக்கும், நேர்மைக்கும் எடுத்துக்காட்டானவர். உருத்திரபுரீச்சரத்தின் அறங்காவல் சபையின் தலைவரான காலம் முதல் அவர் தினசரி உருத்திரபுரீச்சரத்தானைத் தரிசிக்கத் தவறியதில்லை. தினசரி காலையில் நான் வேலைக்காக கிழக்கு நோக்கி செல்கையில் அவர் சிவனைத் தரிசிக்க மேற்கு நோக்கிச் செல்வார். எப்படியும் மாணிக்கப் பிள்ளையாருக்கும் முருகனுக்கும் இடையில் சந்திப்பேன். ஒரு புன்சிரிப்பு, தலையாட்டலுடன் ஐயா கடந்து செல்கையில் என் மனது எண்ணும் நான் சிவனிடம் போகத்தேவையில்லை, இந்த சிவ சின்னத்தின் அடையாளத்தின் தரிசனமே எனக்குப் போதுமென்று. இப்போது அந்த சிவதரிசனத்தைத் தேடுகிறேன் ஐயா!

உண்மையாகவும், நேர்மையாகவும், எல்லோர் மனதிலும் கொலுவிருக்கும் பன்முக ஆளுமையாளன் நீங்கள் என்பதாலோ குடமுழுக்குச் செய்த புண்ணியத்தை காலம் தாழ்த்ததாது ஈசன் தந்திட விழைந்ததாலோ என்னமோ நோய் நொடியென்று பாயில் படுத்து பதிவிரதையினதும் , பிள்ளைகளதும் பணிவிடை வேண்டாது விரைந்து சென்று விட்டீர்கள். ஈசன் தாள் பணிந்தார்க்கு இறப்பில்லை என்பதை ஏற்று உங்களைப் போற்றுகின்றேன். மீண்டும் வாருங்கள் உங்களுக்கான பணியிங்கு நிறையவுண்டு ஐயா!

ஆத்மார்த்த அஞ்சலிகளோடு.........
திருமதி. மீ. இதயசிவதாஸ்
அதிபர்,
கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி,
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு கிருஸ்ணர் தேவஸ்தானம்
අරුල්මිහු ක්‍රිෂ්නර් දේවස්ථානය
Arulmigu Kirushnar Thevasthanam
T.P: 021 228 4411
Email: Arulmigukirusnar123@gmail.com
Reg No / பதிவு இல } HA/5/KL/31
கிளிநொச்சி
Kilinochchi.
தலைவர் / President
செயலாளர் / Secretary
தனாதிகாரி / Treasurer

திகதி / Date ..... / ..... /20........

# மக்களுக்காகவே வாழ்ந்த உத்தமர்

தோன்றிய பொருட்கள் அனைத்தும் அழிவடையும் என்பது இயற்கையின் நியதி. இவ்வுண்மையை எத்துணை கற்று உணர்ந்தாலும், சிலரது இழப்பு நம் மனதைப் பாதிக்கவே செய்கிறது. அண்மையில் மறைந்த அமரர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்களுடைய இழப்பு அத்தகைய ஓர் இழப்பாகவே கருதவேண்டி இருக்கிறது.

அமரர் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்கள் விசேடமாக வன்னி நிலப்பரப்பிற்கு ஆற்றிய சேவைகள், தொண்டுகள், ஆன்மீகப்பணிகள் அநேகம். இவர் இந்து சமயத்திலும், தமிழ் மொழியிலும் தீராத பற்றுக் கொண்டவர். அதன் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். அன்னார் ஆரம்ப காலத்தில் கிராம சேவை உத்தியோகத்தராகப் பணியாற்றி இளைப்பாறிய நிலையில், நல்ல சமூக சேவையாளராகவும், ஆன்மீகவாதியாகவும், அரசியல் வாதியாகவும், சமூகத்திற்கு பெரும் தொண்டாற்றியுள்ளார். அன்னார் இந்து ஆலயங்கள் அமைப்பதிலும் சீர் செய்வதிலும் திறமையும், அனுபவமும், ஆளுமையும் கொண்ட உத்தமர். அந்த வகையில் கிளிநொச்சி நகரில் ஆலமரத்தின் கீழ் சிறிய குடிசைக் கோயிலாக இருந்த அருள்மிகு கிருஸ்ணர் ஆலயத்தை எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் பெரும் ஆலயமாக அமைத்து கும்பாபிஷேகம் செய்த பெருமை அமரர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்களையே சாரும். மேலும் இந்த ஆலயத்திற்குத் தேவையான காணியை பெரும் போராட்டத்திற்கு மத்தியில் பெற்றுக் கொடுத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையும் இவரையே சாரும். கண்ணபிரான் திருவருளால் இன்று இவ்வாலயம் பொலிவுடன் சிறப்பாக உயர்ந்து நிற்பதற்கு கருவியாகச் செயற்பட்டு அயராது உழைத்தவர் அமரர் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்கள் என்பதை யாரும் மறந்து விட முடியாது .

இவர் இந்த ஆலயத்திற்கு 2000ஆம் ஆண்டிலிருந்து 18 வருடங்கள் தலைவராகத் தொண்டாற்றி சாதனை படைத்த உத்தமர் ஆவார். அன்னார் தலைவராக இருந்த காலத்தில் 2016ஆம் ஆண்டிலிருந்து 3 வருடங்கள் ஆலயத்தின் பொருளாளராகத் தொண்டாற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இதைப் பெரும் பாக்கியமாக நான் கருதுகிறேன்.

கிளிநொச்சி நகர் அருள்மிகு கிருஸ்ணர் ஆலயம் மாத்திரம் அல்ல மேலும் ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் ஆலயம், உருத்திரபுரம் சிவன் ஆலயம் போன்ற ஆலயங்களிலும் தலைவராக இருந்து ஆலய புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகங்கள் செய்து இறைபணி செய்துள்ளார். இவரின் சேவையை கிளிநொச்சி மண் என்றும் மறக்காது. இந்த உத்தமரின் எதிர்பாராத மறைவு நாட்டிற்கும், சமூகத்திற்கும், அவரின் குடும்பத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருடன் துயர் பகிர்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கிளிநகர் அருள்மிகு கிருஸ்ண பரமாத்மாவைப் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ! ஓம் சாந்தி ! ! !**

வைத்தியர் இரா. தர்மலிங்கம்,
தலைவர்,
கிளிநகர் அருள்மிகு கிருஸ்ணர் ஆலய பரிபாலன சபை,
பிரதம குரு, மற்றும் நிர்வாகத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
இல.882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎:-021 228 0024, 021 222 1595,
:-021 228 0024, 021 222 1595,
:-077 691 3244
:-shritharanmp@gmail.com
:-www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District,
No.882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎:-021 228 0024, 021 222 1595,
:-021 228 0024, 021 222 1595,
:-077 691 3244
:-shritharanmp@gmail.com
:-www.shritharan.com

## மறைந்தது கிளிநொச்சி மாவட்டத்தின் பேராளுமை!!!.

கிளிநொச்சி மண்ணின் பேராளுமையாக இருந்து பல்துறைசார் பணிகளை முன்னெடுத்ததனூடு, எமது மாவட்ட மக்களின் மனங்களில் நீங்கா இடம்பெற்றிருந்த, ஓய்வுநிலை கிராம அலுவலரும், வடக்கு மாகாணசபையின் மேனாள் உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஆணிவேரும், என் அன்பிற்குரிய ஆஸ்தான வழிகாட்டியுமாகிய அமரர்.சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்களின் திடீர் இழப்பு என்னை நிலைகுலையச் செய்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், தமிழ்த்தேசிய இனத்தின் தலைவரையும் ஆத்மார்த்தமாக நேசித்ததன் வெளிப்பாடாகவே ஐயாவின் பணிகள் அன்றும், இன்றும் ஒருசீராய் அமைந்திருந்தன. தமிழின விடுதலை என்ற கொள்கையை ஏற்று தன் அரசியற்பணிகளை ஆரம்பித்திருந்த இவர், இன விடுதலைப் போர் மௌனிக்கப்பட்ட பின்னரும், போர் தின்ற நிலமொன்றில் கையறுநிலையில் நின்ற மக்களின் குரலாகவே மீளவும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கினார்.

போரும், இடப்பெயர்வுகளும் தந்த இழப்புக்களின் வலிசுமந்திருந்த எமது மக்களின் மனமறிந்த கிராம அலுவலராக, அவர் ஓய்வு, ஒழிச்சலற்று ஆற்றியிருந்த மகத்தான மக்கள் பணியும், மாவட்ட எல்லைகளைக் கடந்தும் கரம்விரித்த அவரது மனிதாபிமானச் செயற்பாடுகளுமே, 2013களில் அவரை ஓர் மக்கள் ஆணை பெற்ற வடக்கு மாகாணசபை உறுப்பினராக மாற்றியிருந்தது. எந்தக் கொள்கைவழி நின்று தன் மக்கள் பணிகளை ஆற்ற ஆரம்பித்திருந்தாரோ, அதே கொள்கைகளின் வழி தன்னைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைத்துக்கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தூணாகவே இறுதிக் கணம் வரை அவர் இருந்திருக்கிறார்.

தன் அரசியல் இலக்கினின்று கிஞ்சித்தும் பிறழாத பெருமனிதனான இவரும், இவர் வாழ்ந்த விதமும் என்றென்றைக்கும் எம்போன்ற பலருக்கும் வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை. கட்சி நிலைப்பாடுகளைக் கடந்து, என்மீது கொண்டிருந்த தனிப்பட்ட அன்பினாலும், அக்கறையாலும், எனது அரசியல் பயணத்தை போலித்தனங்களற்று நேசித்த ஓர் ஆத்மார்த்த வழிகாட்டியை, இத்தனை அகாலத்தில் இழந்திருப்பது எனக்கு ஆழ்ந்த துக்கிப்பைத் தந்திருக்கிறது.

இழந்து இழந்து களைத்தே ஏதிலிகளான எமது மக்களின் மனக்காயங்களுக்கு மருந்தாய் அமைந்த, நினைவேந்தல்களை அனுஸ்டிக்கும் உரிமையை நிலைநிறுத்துவதற்காய் எமது மண்ணில் இவர் ஆற்றியிருக்கும் பணிகள் அளப்பரியவை. அதிலும் குறிப்பாக மீள்குடியேற்றத்தின் பிற்பாடு, கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திலிருந்து இராணுவத்தினர் வெளியேறியதும், ஆயுத முனையிலான உயிர் அச்சுறுத்தல்களையும், இராணுவ விசாரணைகளையும் புறந்தள்ளி 2016 ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி தமிழ்த்தேசிய மாவீரர் தினத்தை நினைவேந்துவதற்குரிய ஒழுங்குகளை துணிந்து பொறுப்பேற்று, செவ்வனே நடாத்தி முடித்த ஐயாவின் தற்துணிவே, தமிழர்களின் உணர்வெழுச்சியை மீளவும் சர்வதேசம் வரை கொண்டு சேர்த்திருந்தது. நெருக்கடிகள் நிறைந்த அக்காலத்தில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட அவர் தான், இன்றளவும் அப்பணிக்குழுவின் தலைவர். இவ்வருடமும் மாவீரர் நாள் நினைவேந்தலை நடாத்துவதற்கான பூர்வாங்கப் பணிகளை அவரின் தலைமையிலேயே ஆரம்பித்துள்ள எம்மை, எதிர்பாராது நிகழ்ந்த அவரது இழப்பு பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

சமூக, அரசியல் பணிகளுக்கு அப்பால், இயல்பிலேயே ஆன்மீக நாட்டம் மிக்க இவர், தன் அந்திம காலத்திலும் எல்லாம் வல்ல ஈசனின் தொண்டனாகவே இருந்து இறையடி சேர்ந்திருக்கிறார். பொருளாதார நெருக்கடி, கொரோனாப் பெருந்தொற்று என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுநாடுமே ஸ்தம்பித்திருந்த அந்த இடர்காலத்திலும் உருத்திரபுரீஸ்வரப் பெருமானின் அறங்காவலர் சபைத் தலைவராக இருந்து, எம்பெருமானின் ஆலயம் புத்தெழில் பெற்று மிளிரவும், இவ்வருட முற்பகுதியில் குடமுழுக்குப் பெருவிழா காணவும் தன்னை முழுதாக அர்ப்பணித்ததோடு, அவ் ஆலயத்தின் மீது தொல்பொருள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளையும் அந்த ஊரின் மக்களோடு ஒன்றிணைந்து தடுத்து நிறுத்தி, இந்த மாவட்டத்தின் மரபுரிமைச் சொத்தான உருத்திரபுரம் சிவன் கோயிலின் சுயாதீன இயங்குநிலையை மீள நிலைநாட்டியமை அவரது காலப்பெரும் பணி.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் நீதி, நேர்மை, அநீதிக்கெதிராய் ஆக்ரோசிக்கும் நெஞ்சுரம், அன்பின்பால் எல்லோரையும் அரவணைக்கும் வசீகரம், தோற்றத்திலும், வாழ்விலும் பேணிவந்த வெண்மையும், எளிமையும், தனிமனித ஒழுக்கம், பிறர்க்குதவும் பெருங்கொடை உளம் என்பன மற்றவர்களுக்கு முன்னுதாரணமான மனிதனாக அவரை அடையாளப்படுத்தியிருந்தன. மிகச் சிறந்த நிர்வாகியாக, மக்கள் பிரதிநிதியாக, மக்களின் சேவகனாக, சமூக சீர்திருத்தவாதியாக, ஆன்மீகப் பணியாளனாக, தன் பிள்ளைகளையும் தன்வழியே உருவாக்கிய நற்தந்தையாக, வாழும் காலம் முழுமைக்கும் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த ஐயாவின் இழப்பு சாதாரண இழப்பல்ல. அது எம் எல்லோரதும் உணர்வுகளோடு ஒன்றிக்கலந்த ஒரு பெருமனிதனின் இழப்பு. இருந்தபோதும் காலத்தின் சமரசங்களுக்கு கட்டுப்பட்டேயாக வேண்டிய கட்டாயத்தை ஏற்று, ஐயாவின் ஆத்மா உருத்திரபுரீஸ்வரப் பெருமானின் திருக்கழல்களில் இணைந்திருக்கப் பிரார்த்திக்கும் அதேவேளை, இழப்பின் வலி சுமந்து நிற்கும் அவரது மனைவி, மகள்மார் மற்றும் உறவுகளுக்கு என் ஆழ்மன அனுதாபங்களையும் பகிர்ந்து கொள்கிறேன்.

இங்ஙனம்,
மக்கள் பணியிலுள்ள,

சிவஞானம் சிறிதரன்
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
இல : 882, ஆறுமுகம் வீதி,
[illegible], கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மார்த்த அஞ்சலி
## பன்முக ஆளுமையாளருக்கு

என் நேசிப்புக்குரியவரே!
நெஞ்சம் நிறைந்தவரே!
பாசத்தால் பாரிதனைக்
கட்டி அணைத்தவரே!
தேசத்தின் பற்றாளரே!
தமிழ்தேசிய உணர்வாளரே!
நாசத்தின் சிம்மசொற்பனமே!
நன்மையின் நாயகனே!
வேசமிலா வெள்ளையுள்ளமே!
வேட்டியுடை அதுபோலவே
மாசற்ற மாந்தரே!
மனிதநேயரே!
காசற்ற கதைபேசாக் கண்ணியனே!
காலத்தைப் பொன்னாக்கி
கடமையே மூச்சாய்
கோலம் சிதைந்தாலும்
கொள்கை மாறாதவரே!
காலமிது போற்றும்
ஞாயிறாய் நின்றவரே!
ஓலமிட்டறியாத ஒருங்கிணைப்பாளரே!
மாவீரரின் நினைவினை ஏந்தியே
மாண்புறு சேவையில் மலர்ந்தவரே!

தேசப்பற்றும் தெய்வீக பக்தியும்
பேசாப் பொருளின் பேசு பொருளானவரே!
நெற்றியில் நீறும்
நெஞ்சினில் வீறுமாய்
பற்றுணர்வோடு பாதை மாறிடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பங்காளரே!
சற்றும் ஓய்ந்திடா
ஓயாத அலையே!
முற்றும் துறந்த
முனிவரைப் போலவே
அத்தனை பணியிலும்
அயரா துழைத்தவரே!
சிந்தனை செயலில்
சிறப்புற்ற மனிதராய்
வந்தனை செய்யும்
வணக்கத்திற்குரியவரே!

கண்ணனைச் சிவனை(உருத்திரபுரீச்சரத்தை)
மீனாட்சி அம்மனை
மண்ணிது போற்றிடும்
அழகான ஆலயமாய்
பண்பாடு மிக்கதாய்
குடமுழுக்குச் செய்த
பெருங்கருணைப் பேராறே!
அகழ்வாராய்ச்சியென ஆலயம் வந்த
ஆக்கிரமிப்பாளரை
புகழ் ஈஸ்வரத்தை விட்டு
புறமோட வைத்தவரே!
மக்கள் பணியும் மகேசன் பணியென
தக்க பணிகளில் தலைசிறந்த வரமே!

திக்கெலாம் புகழ்
மாகாண சபையினில்
பக்கபலமென பற்பல பணிகளை
பக்கச் சார்பற்று பரந்திடு சேவையில்
ஊக்கமாய் நின்று உதவிய உன்னதரே!
தாக்கம் பலதையும் தாங்கிய மனிதனாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமப் பணிகளில் தனித்துவமானவர்
ஏக்கம் நிறைந்த ஏதிலியானவர்க்கு
ஏற்ற வகையில் என்றும் உதவியமாந்தர்
பூக்கும் புன்னகை புரிந்துணர்வோடு
யார்க்கும் உதவிய அரு(ம்)ட்பணியாளர்
தூக்கும் தெய்வமாய் துலங்கிடு வாழ்வினர்
பாக்களால் அவர் பாதம் போற்றுவோம்
பூக்கள் தூவியே புன்னகையாளரை
சா தனை வென்ற சாதனையாளரை
சகலரின் நெஞ்சிலும் வாழும் மாமனிதரை
சுகமது சொர்க்கமாய் சிவனுமை பாதமே
அகமெலாம் ஆத்மார்த்தமாய் அஞ்சலித்திடவே
அடைந்தனன் பேறே

இழப்பினில் கதறும் இணையவள் இல்லாள்
இதயம் நிறைந்திடு மகள்களின் அலறல்
துணையென வந்த பாசவுறவுகள் சொந்தபந்தங்கள்
ஊரார் உறவுகள்
பெருந்தலைவர்கள் அரசியலாளர்கள்
கருணையாளனின் பிரிவால் துடிக்கும்
பெருந்திரளானோர்
சோகம் பகிர்ந்து தொடர்வோம் அவர்வழி
"சாவே உனக்கொரு நாள் சாவு வந்துசேராது"

இன்று (02.10.2022) மகாத்மா காந்தியின் ஜனனம்
மக்கள் சேவகனின் மறுஜென்மம்

**- கலா கணேசன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய புன்னகையாளா?

நித்திய புன்கையாளா !
நினைவுகள் நெஞ்சினில் மாழா
சத்திய நாயகனே!
சாதனை வென்றவனே!

பக்தியின் பரவசமே!
பாடலின் உன்னதமே!
சுத்தியுனை ஊரே
உண்மையில் அன்புடனே

புன்சிரிப்பு பூத்தமுகம்
மென்வார்த்தை மெல்லிதயம்
அன்பான அகத்தூய்மை
அரவணைக்கும் அறப்பணிகள்

என்றென்றும் எமக்காக
ஏற்றபணி அனைத்திலுமே
நின்முகந்தான் காணுகிறோம்
நித்தமுனைத் தேடுகிறோம்

வன்கொடுமை கண்டுவிட்டால்
பொங்கியெழும் பெரும்புலியே
உன்பாதம் தொழுதெழுவோம்
உன்னதமே பணிதொடர்வோம்.

அன்புறவுடன் கலா கணேசன்
பிரதேசசபை உறுப்பினர்
உருத்திரபுரம் வட்டாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுபதி அண்ணாவுக்கு கண்ணீரால் எழுதும் இதய அஞ்சலி!

### (திரு. சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை அவர்கள்.
### வடமாகாணசபை உறுப்பினர்.
### ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்)

நெடுந்தீவு மேற்கில் அவர்கள் பிறந்த
காணியின் பெயர் "கோயில் காடு"எனவே
கோயில் காட்டு பசுபதி அன்னாவென்றே
அன்போடு நாம் அழைப்போம்.

பெரியையயா குடும்பத்தின் மூத்தமகன்
குறைந்த வயதில் தந்தையின் இழப்பின் பின்
குடும்ப பாரத்தை தானே சுமந்த 'ஆலமரம்"
எங்கள் வழிகாட்டியாக ஒளிதந்த "சூரியன்"

அடிமைப் புழு வாழ்வை எரிக்கப் போராடிய "பெரு நெருப்பு"
அனைத்தையும் ஆராய்ந்து முடிவெடுக்கும் "ஆளுமை"
எதுவரினும் தயங்காத தற்பெருமையற்ற "மாமனிதன்"
தமிழுக்கும், சைவத்துக்கும்
தன்னையே அர்ப்பணித்த
பெரும்" தொண்டன்"

மேடைகள் தோறும் நகைச்சுவை கலந்து
நற் கருத்துக்கள் சொரியும் "பேச்சாளர்"

எந்தப் பதவி வகித்தாலும் மக்கள் நலனையே
தன்னலமாக்கிய தனிப்பெரும் "தியாகி"
தமிழுக்காக ஐரோப்பிய மண்ணிலும் குரல்
கொடுத்த தன்மானத் "தமிழன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்ததன் பயனை இப்படித்தான் வாழவேண்டுமென
எமக்குக் காட்டிய பெரு மதிப்புக்குரிய "ஆசான்"
பிற உயிர்களிலும் மனித நேயம்கொண்ட
மகத்தான "பண்பாளன்"

அன்பையும்,பாசத்தையும் அரவணைப்பையும்
அனைவருக்கும் அள்ளிக் கொடுத்த "கொடையாளி"
அண்ணா! உங்கள் பிரிவோ எம்மை வாட்டுகிறது-இனி
எப்போது எங்கு காண்போமென மனம் ஏங்குகிறது.
நீங்கள் விட்டுப்போனவைகள் எமக்கான பாடப்புத்தகங்கள்
நாமும் இவ்வழிவந்தே உன் வழி அடைவோம்.

துக்கத்தில் துவண்டு மீளமுடியாமல் இருக்கும்
அண்ணி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சகோதரங்கள், உற்றார், உறவுகள், நண்பர்களுடன்
நாங்களும் அண்ணாவின் காலடியில்
கண்ணீர் புஸ்பங்களை வைத்து வணங்குகின்றோம்.

விழிநீர் உருக உங்களை வழியனுப்பி வைக்கின்றோம்.
போய் வாருங்கள் அண்ணா. "தமிழோடு நீங்களும் வாழ்வீர்கள்"
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம்சாந்தி !! ஓம்சாந்தி !!!**

அன்புத் தம்பி..
ஐயாக்குட்டி கோவிந்தநாதன்(பசுவூர்க்கோபி)
நெதர்லாந்திலிருந்து..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய நல்ல நண்பன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை 2ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் முகநூலில் தங்கள் மறைவு குறித்த செய்தியைப் பார்த்து சொல்லொண்ணா வேதனையும், அதிர்ச்சியும் அடைந்தேன். உடனேயே எனது அன்பான மருமகன் திரு.இராசரத்தினம் அவர்களைத் தொடர்பு கொண்டு நடந்த திடீர் மறைவு குறித்து அறிந்து ஆறாத்துயரமும், வேதனையும் அடைந்தேன்.

என்னில் அன்பும், பற்றும், பாசமும், உண்மையான உயர்வான நட்பும் வைத்திருந்த தங்கள் எதிர்பாராத பிரிவு-என்னால் தாங்க முடியவில்லை; ஜீரணிக்கவும் முடியவில்லை.

தங்களின் சமூகசேவை, பொதுத்தொண்டு இறைபணி எமது இன விடுதலைக்காக, மண் மீட்புக்காக நீங்கள் பட்ட துன்பங்களையும் துயரங்களையும் அஞ்சாது நின்று நியாயத்தின் வழி சென்று கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்து சாதிக்கும் திறமை கொண்டநிலைப்பாட்டை என பல்வகைப் பரிமாணங்களை தங்களுக்கே உரியதான, குடும்பத் தலைவனுக்கே உரிய கடமைகளை குறைவின்றி நிறைவேற்றும் தன்மை என்றெல்லாம் உங்களின் பல பரிமாணங்களையும் எல்லோரும் எடுத்து உரைத்தார்கள். உண்மை நிலைப்பாட்டைக் கூறினார்கள் .இவை ஒன்றும் மனதில் ஏறியது போல் நான் உணரவில்லை. என்னிடம் இருந்தது ஒன்றே ஒன்றுதான் அது தான் எங்கள் தூய்மையான நட்பு.

எந்த எதிர்பார்ப்பும் இல்லாத நட்பு. சுயநலமற்ற நட்பு. அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய நட்பு. அந்த நட்பை உணர்வை இங்கு வெளிப்படுத்தும் ஆற்றல் எனக்கு இல்லை.

உங்களை இழந்து துயரப்படுகின்றேன், வேதனைப் படுகின்றேன். தங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்(றோம் )

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

தங்கள் நினைவுகளுடன்

தம்பியையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 74 வருட இப்பூவுலக வாழ்வில் நீங்காத நினைவலைகள்

பிறப்பும், இறப்பும் மனிதவாழ்வின் தொடக்கமும் முடிவுமாகவுள்ளது. இருப்பினும் சிலரது பிரிவு மனித நெஞ்சங்களை அழுத்தி அமுக்கி பிரிந்தவர் நினைவை மீண்டும் மீண்டும் நினைவுக்கு கொண்டுவருவது, பிரிந்தவர் வாழ்வு எமது மனங்களில் ஆழப்பதிந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வாறு தனது 74 வருட இப்பூவுலகவாழ்வில் நீங்காத நினைவுகள் பலவற்றை விட்டுச்சென்ற செம்மல் அமரர் பசுபதிப்பிள்ளை அவர்களின் நினைவாக எனது இதய அஞ்சலிகளைச் செலுத்தி அவரது அன்புத் துணைவிக்கும், பிள்ளைகள், மருமக்கள், உற்றார் உறவினருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பசுபதி ஐயா துணிச்சலானவர் "இளங்கன்று பயமறியா" போல் தனது கருத்துக்களை உரக்கத்தெரிவித்தவர். ஏழை, எளியவர் மேல் கரிசனையோடு தனது சேவையை வழங்கியவர். எந்நேரமும் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடியவர். எவர் முன்நிலையிலும் தனது கருத்துக்களை ஐயந்திரிபறக் கூறியவர், பயம் என்பது அவரது அகராதியில் இல்லை. தனது இலட்சியக்கொள்கையை உறுதியாகப் பற்றிப்பிடித்த பெரியவர். பல செய்திகளை எமக்கு பிள்ளை அவர்கள் விட்டுச்சென்றாலும் தனது ஆன்மீக வாழ்வுக்கூடாக பலரது மனங்களில் நீங்காத இடம்பெற்றுள்ளார்.

இறுதி நேரத்தில் தனது மூச்சுப்பேச்சு எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைவடையும்போதும் முழுமையாகத் தன்னை இறைவனிடம் ஒப்படைத்து எவருக்கும் சலனமேற்படாது இவ்வுலகை விட்டு நீங்கிய பெரு மகான். இறை அன்பின் கரங்களில் பசுபதி ஐயா இன்புற்றிருக்க நாமும் இறைவனிடம் வேண்டுவோமாக.

த . குருகுலராசா.<br>
மேனாள் வடக்கு மாகாண சபை<br>
உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். திரு. சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை அவர்களின் தெய்வீக பணி

நம்முடன் இருந்து மறைந்துபோன நல்லோர்களின் வாழ்க்கையினை இடையிடையே சிந்தித்துப் பார்ப்பது நமக்கு நன்மை பயக்கும். இந்தச் சிந்தனையின் பயனாக எங்களின் சொந்த வாழ்க்கையை முன்னேற்றுவதற்குப் பல வழிகாட்டல்களையும் முன்னுதாரணங்களையும் நாம் அவர்களது வாழ்க்கையில் இருந்து கற்றுக்கொள்ள முடியும்.

இன்றைக்கு 9 வருடங்களுக்கு முன்பு பூநகரிப் பகுதியில் உள்ள விநாயகர் ஆலயம் ஒன்றில் முதல் தடவையாக திருவாளர் பசுபதிப் பிள்ளை ஐயா அவர்களைச் சந்தித்தோம். அங்கு அவர் ஆற்றிய உரையானது சமய மறுமலர்ச்சி ஒன்றை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதாக இருந்தது. இந்த இலக்கை எய்தும் நோக்குடன் **"கிளிநொச்சி சின்மயா மிஷன்"** பணிகளுக்கு ஓர் உறுதியான வலுவான பக்க பலமாக இறுதிவரை இணைந்து இருந்துள்ளார்.

ஐயா அவர்கள் மாகாண சபை உறுப்பினராக இருந்த போதும் பல வேலை சுமைகள் மத்தியிலும் எங்கெல்லாம் நமது சமயத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் நேரடியாக சென்று குரல் கொடுப்பதில் மிகவும் நெஞ்சுரம் வாய்ந்தவராக இருந்தார்.

குறிப்பாக இந்துபுரம் சிவன் கோயில், உருத்திரபுரம் சிவன் ஆலயம் போன்றவற்றை கூறலாம். ஐயா அவர்களின் துணிச்சலான தீவிரமான செயற்பாடு இல்லாதிருந்தால் இன்று நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரபுரீஸ்வர ஆலயத்திற்கு பதிலாக ஓர் பௌத்த விகாரையே இருந்திருக்கும். ஜெயந்திநகர் மீனாட்சி அம்பாள் கோயில், கிளிநொச்சி கண்ணன் ஆலயம், உருத்திரபுரீஸ்வரர் சிவனாலயம் போன்ற ஆலயங்கள் ஐயாவின் பெரு முயற்சியால் இன்று குடமுழுக்கு பெற்று கம்பீரமாக எழுந்துள்ளன. பல கோவில்களில் இடம்பெறுகின்ற சிறு பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதில் உறுதுணையாக இருந்துள்ளார்.

ஒரு சமயம் இவ்வாறான முயற்சி ஒன்றில் ஈடுபட்ட பொழுது கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை புன்னகையுடன் எதிர்கொள்வதனையும் அவதானித்து உள்ளோம். அத்தகைய பொறுமைக்கு ஐயா அவர்கள் இலக்கணமாக வாழ்ந்துள்ளார்.

சின்மயா மிஷனால் அறநெறி வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட பொழுது பெரும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். குழந்தைகள் கல்வி கற்பதற்கு Multimedia Projector ஒன்றை வழங்கி இருந்தார்.

இன்னும் ஒரு சமயம் சாந்தபுரம் என்னும் கிராமத்தில் கட்டடம் இன்றி காலை மரத்தின் கீழ் அறநெறி மாணவர்கள் கல்வி கற்றதனை அவதானித்து ஐயா அவர்கள் உடனடியாக மேற்படி கட்டடம் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து வழங்கினர்.

இவ்வாறு ஒரு உன்னத இந்து சமயத்தின் உயிர் வாழும் அடையாளமாக வாழ்ந்து பல்வேறு ஆலய திருப்பணிகள் மற்றும் அறப்பணிகளை ஆற்றிய ஐயா அவர்கள் மாவட்டத்தில் ஓர் வெற்றிடத்தையே விட்டுச் சென்றுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வாழ்வாங்கு வாழ்ந்தாலும் நாம் உதித்த இடத்திற்குச் திரும்பச் சொல்ல வேண்டும். இது இறை நியதி, யாவருக்கும் பொதுவானதே.

**"முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பராய் வெந்து மண்ணாவதும் கண்டு பின்னும் இந்தப் படி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னின் அம்பலவர் அடி சார்ந்து நாம் உய்ய வேண்டும் என்றே அறிவார் இல்லையே"**

என பட்டினத்தடிகள் நிலையாமையை பெரும் தவத்தின் தெளிவாக நமக்கு கூறிச் சென்றுள்ளார்.

நாமும் இக்குறுகிய வாழ்வில் எல்லோரும் எந்நேரமும் இறைவனைத் தியானித்து தன்னலமற்ற சமூகத் தொண்டுகள் பல புரிந்து பிறரது மகிழ்வில் இறைவனைக் கண்டு எம் வாழ்வைப் புனிதப்படுத்தி பயனுள்ளதாக்க வேண்டும் என்பதே திருவாளர் பசுபதிப்பிள்ளை அவர்கள் வாழ்ந்து காட்டி எமக்கென விட்டுச் சென்ற செய்தியாகும். திருவாளர் பசுபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா இறைநிலை அடைந்து சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

**"போற்றி எல்லா உயிர்க்கும்"**

-நன்றி-

சிவேந்திர சைதன்யா
சின்மயா மிஷன்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் அமைச்சருடன் பொதுச்செயலாளர்
## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

அமரர். சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை அவர்களின் மறைவு எமக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். அன்னாருடன் சக மாகாணசபை உறுப்பினராக செயற்பட எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அக்காலத்தில் என்னுடன் மிகவும் நெருக்கமாகப் பணியாற்றியவர்களுள் "பசுபதிப்பிள்ளை அண்ணரும் ஒருவர். சுகாதார அமைச்சின் ஆலோசனைக்குழு உறுப்பினராக கிராமிய சுகாதார மேம்பாட்டில் கூடிய சிரத்தை உள்ளவராக எமது அமைச்சின் அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் நெருக்கமாக செயற்பட்டார்.

அன்னார் மாகாணசபை அமர்வுகளின்போது மிக ஆர்வத்துடன் கலந்துகொள்ளும் மரியாதைக்குரியவராகக் காணப்பட்டார். தான் சரி என எண்ணும் எந்தவிடயத்தையும் மிகத்துணிவுடன் முகமன்பாராமல் சபையிலே முன்வைப்பதற்கு என்றும் தயங்கியதில்லை. அன்னார் அபிவிருத்திசார் விடயங்களிலும் இராணுவ ஆக்கிரமிப்பிற்கு எதிராகவும் போராடவும் குரல் கொடுக்கவும் என்றும் தயங்கியதில்லை. அவ்விடங்களை அனைவரும் விளங்கிக்கொள்ளக்கூடியதாக பல உதாரணங்களையும் சிறுகதைகளையும் சபையில் கூறுவதனூடாக தனது கருத்தை ஆணித்தரமாக முன்வைப்பார். மக்களுக்கு சேவைசெய்ய கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாக உரியவர்கள் பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்த " நந்தவனத்தில் ஓர் ஆண்டி" பாடலை சபையில் கூறியதை மறக்க முடியாது. அன்னார் தாயகபற்றாளன், விடுதலை விரும்பி, மக்கள் சேவகன், நல்ல மனிதன். அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அன்னாரின் குடும்பத்தினர், உற்றார், உறவுகள் அனைவருடனும் துயர்பகிர்கின்றேன்.

மருத்துவர். பத்மநாதன் சத்தியலிங்கம்
முன்னாள் சுகாதார அமைச்சர்
வடக்கு மாகாண சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுப் பதிவு

இலங்கை தமிழ் மக்களின் குறிப்பாக அரசியல் தீர்வு ஒன்றிற்காக வாழ்நாளை அர்ப்பணித்த ஓர் நல் உள்ளம் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அமரர் பசுபதி ஐயா என்பதனை இவ்விடத்தில் பதிவு செய்கிறேன். சிறுவயதிலே இளைஞர் அமைப்பின் உறுப்பினராகவும் தமிழ் விடுதலைக்கூட்டணியின் அடங்காப்பற்றாளனாக 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலே மேடைகளில் அவரது முழக்கங்களை நான் அறிந்துள்ளேன். அரச அலுவலராகப் பணியாற்றிய போதும் சைவமும், தமிழும் தழைத்தோங்கவும் தமிழ் மக்களின் விடிவிற்காகவும் அவர் போராடியது இந்த மண்ணிலே பதிவிடப்படும் கல்வெட்டாக ப் பதிந்து விட்டது என்பதை உறுதியாகக் கூறுகின்றேன்.

வடமாகாணசபை உறுப்பினராக இருந்த வேளையில் சிங்கள மேலாதிக்க கொடுங்கோலர்களின் அடக்கு முறைகளைத் துணிந்து குரல் கொடுத்த ஒரு செயல் வீரன். கிளிநொச்சி மாவட்ட மக்களின் அபிவிருத்திக்காகவும் அவர்களின் சமய சமூக பண்பாட்டு விருத்திக்காகவும் தன்னலமற்ற சேவையை வழங்கிய ஓர் நல்ல மனிதர். எந்த வேளையிலும் திருநீற்றுப் பூச்சுடனும் சந்தணப் பொட்டுடனும் சைவ பக்தனாக எங்கள் மத்தியிலே வலம் வந்த அந்த நல் உள்ளம் படைத்தவர். கிருஸ்ணர் கோவில் நிர்வாகத்திலும் சி.க.கூ சங்கத்தில் இருந்த வேளையில் எனது கணவருடன் தொடர்பு கொண்டு அவற்றை கணக்காய்வு செய்து நிர்வாகத்தினருக்கு கணக்களி தகைமையை வெளிப்படுத்தியதை எனது கணவர் நினைவு கூருவார். அவரது வெளிப்படைத்தன்மை, நேர்மை, உண்மை, கட்டுப்பாடு என்பன அவரை நல்ல மனித உள்ளம் கொண்ட மனிதராகவும் சிறந்த அரசியல்வாதியாகவும் இந்த தமிழ் மண் நினைவு படுத்தும் என்ற வலுவான நம்பிக்கையுடன் அவரது ஆத்மா சாந்திக்காகவும், அவரது குடும்ப உறுப்பினர்கள் அமைதி அடைந்து அவரது தடத்திலே நல்வாழ்வு வாழ பிராத்திக்கின்றேன்.

திருமதி. சாந்தி. ஸ்ரீஸ்காந்தராசா,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,
இலங்கை தமிழ் அரசுக்கட்சி,
வன்னி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவுகள்.....

அமரர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்களது மரண செய்தி எங்கள் மனங்களை உறைய வைத்தது. கிராம அலுவலராக ஐயா கடமையாற்றியபோது அவரது ஆளுமையைக் கண்டிருக்கின்றேன். ஓய்வின் பின்னரான காலங்களில் விடுதலை வேட்கையோடு கண்டிருக்கின்றேன். இறுதிவரை தமிழ் இனத்திற்காகக் குரல் கொடுக்கும் தலைவனாகக் கண்டிருக்கின்றேன். நெற்றியில் நீறுடன் ஆன்மீகத் தொண்டனாகக் கண்டிருக்கின்றேன். மனிதன் எப்படியெல்லாம் முன்மாதிரியாக வாழ்ந்து காட்ட முடியுமோ அப்படியெல்லாம் ஐயா எங்களுடன் வாழ்ந்திருக்கிறார். அவரது அமைதியுடன் கூடிய பக்குவமும், சிரிப்புடன் அரவணைக்கும் மனத் தைரியமும், மெல்லப் புகட்டும் அறிவுரைகளும், மேனி சிலிர்க்கும் போர்க்குணமும் நிறைந்த பெருமனிதன் ஐயா. என்ன அவசரம்? இன்னும் இரு தசாப்தங்களேனும் எம்மோடு இருந்து இளைய தலைமுறையினை வழிநடாத்தியிருக்கலாமே...

**உங்களை நெற்றி நிறைந்த நீறுடன் நித்தம் காணத் துடிக்கிறேன்.**

ஐயாவின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆறுதலைத் தெரிவிப்பதுடன் ஐயாவினுடைய ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**விஷ்ணு சுவிஷ்கரன் JP**
பொதுமுகாமையாளர்,
கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்(வ.து)
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீ.வீ.கே. சிவஞானம்
அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை
සී.වී.කේ. සිවඥානම්
සභාපති, උතුරු පළාත් සභාව
C.V.K. SIVAGNANAM
Chairman, Northern Provincial Council

A9 Road, Kaithady (Jaffna) | e-mail: cvkayes@gmail.com | Telephone: 021 205 7084, 021 205 7081 (208) | Fax: 021 205 7084

# மதிப்பளிப்பு அஞ்சலி

அமரர் பசுபதிப்பிள்ளை அவர்களை ஒரு மக்கள் நேயமுள்ள, மக்களால் நேசிக்கப்பட்ட ஒரு கிராம அலுவலராகவும், சமூக நலன் சார்ந்த செயற்பாட்டாளராகவும் நான் நீண்ட காலம் அறிந்திருந்தேன்.

இந்தச் சேவைகள் காரணமாகவும், அவரது தமிழ்த் தேசிய இனத்தின் பால் கொண்ட அர்ப்பணிப்பு காரணமாகவும் 2013 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினராக கிளிநொச்சி மாவட்ட மக்களால் தெரிவு செய்யப்பட்டார். மாகாண சபையின் முழு ஐந்து வருட காலமும் மிகச் சிறப்பாக சபைக்கு உள்ளேயும் வெளியேயும் செயற்பட்ட பெருமைக்குரியராகவே நான் அவரை எப்பொழுதும் பார்த்திருக்கிறேன்.

சபை அமர்வுகளில் அவர் முன்வைத்த கருத்துக்கள் மிகப் பொருத்தமானதும், நாகரீகமானதும் ஆழ்ந்த அர்த்தம் பொதிந்தவையாகவும் இருந்தன.

வடக்கு மாகாண சபை மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு செயற்படவில்லை என்ற ஆதங்கம் அவருக்கு இருந்தது. அதனை ஒருமுறை சூழ்நிலைப் பொருத்தமாக, அவர் சபை அமர்வில் இருந்து வெளியேறும் போது அவருக்கே உரித்தான பாணியில் முன்வைத்த ஒரு கருத்து இப்படி அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி,
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி-அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"

எப்படி தமிழ் மண்ணையும் மொழியையும் நேசித்தாரோ அதே அளவுக்கு தமது சமயத்தையும் நேசித்தார். சிவசின்னமான விபூதியை நெற்றியில் அணிந்தவராகவே எப்பொழுதும் காணப்படுவார். நிறைவான வாழ்வு வாழ்ந்த ஒரு பெருமகனாகவே அவரை நான் பார்க்கிறேன். கிளிநொச்சியை வாழ்விடமாகக் கொண்டிருந்த போதும், தாம் பிறந்த நெடுந்தீவு மண்ணையும் மறக்காதவர்.

இவ்வாறு தமிழ் இனப்பற்றோடும் சமயப் பற்றோடும் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த அவரின் ஆன்மா வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட பிரார்த்தித்து, அன்னாரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

சீ.வீ.கே. சிவஞானம்
அவைத்தலைவர்
வடக்கு மாகாண சபை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ
Sivamayam

# மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
# මහාදේවා සුවාමිකල් ළමා නිවසය
# MAHADEVA SWAMIGAL CHILDREN HOME

Jeyanthinagar, Killinochchi, Srilanka

Reg.No (Probation). NP/24/2/1/CH/13(01/09/2009), Reg No (HinduReligious & Cultural Affairs) HA/04/KL/15(05.05.2008)


❖ **Founder**

Late.T. Rasanayagam. (Former Government Agent. Kilinochchi & Deputy Chief Secretary. Administration, NP

❖ **Patrons**

- The Most. Ven Sri la Sri Somasunthara GnanaSampanthaParamacharya swamikal, Chief incumbent .Nallur Adheenam,Jaffna
- Mrs. R. Ketheeswaran, Government Agent, Kilinochchi.
- Divisional Secretaries, Karachchi, Kandawalai, Pachchilapalai, Poonakari.

❖ **Senior Consultant**

- Mr.K.,V.Panchalingathurai –UK.
- Mrs.S.Shanthini – Canada.
- Mrs.T.Mahendran – Canada.
- Mr.P.Navaneetharajah – Australiya.
- Mr. Rasanayagam Sasikaran, UK. Advisor, Foreign Affairs.
- Mr. R. Pathmanathan Deputy Chief Secretary, Finance, NP.
- Eng.E.Kaandeepan Mas Intimates,Vidiyal.

❖ **President**

- Mr.S.Mohanabavan . MA(Econ)PGDM, BA(Hons)Econ. Director-Planning, Ministry Of Health, NP. & President, Karaichchi South MPCS.

❖ **Senior Vice Presidents**

- Mr.A.Kanagaratnam,J.P,Retired Principal.
- Mr.M.Navaratnam,J.P, General Merchants.

❖ **Vice Presidents**

- Mr.K.Vairamuththu, J.P. Ret.DDE,
- Kilinochchi
- Mr.S.Yasotharan,Industrialist, Kilinochchi

❖ **General Secretary**

- Mr.K.Pakeerathan, (KPK) Industrialist, Kilinochchi.

❖ **Vice Secretary**

- Mr.K.Vignarajah, Principal, Thiruvaiyaru M.V Kilinochchi.

❖ **Treasurer**

- Mr.S.Pathmasri, Asst. Commissioner, Land Title Settlement Dept. Jaffna.

❖ **Executive Committee Members**

- Mr.A.Ketheeswaran,ADP, Kachcheri, Kili.
- Mr.T.Ratnasingam, Jeyapuram, Poonagary
- Mr.S. Premkumar, DO, Kachcheri. Kili.
- Mr.B.Sathananthan, CMA, DGH, Kili.
- Mr.M.Mokanathas. Manager, Karachchi South MPCS
- Mrs.Kiruba Jeyakumar. Nagathampiran Multi Traders, Jeyanthinagar.
- Mr. N. Sothinathan, Retired Principal.
- Mr. J. Kajeepan, Poonagary.
- Mr. P. Pirathap.HNDA, DO, Maritimepattu.
- Mr. N. Ravibavan, Poonagary.


## இதய அஞ்சலி

### மறக்கமுடியாத பண்புடையாளன்
### அமரர். சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை
### அவர்கள்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்
பெருமை உடைத்தது இவ்வுலகு"

பெருமை உடைய இவ் உலகினில் மாசற்ற வெள்ளை உடை, திருநீற்று நெற்றி, பிரகாசிக்கும் தோற்றம், அன்பான பேச்சு. அர்ப்பணிப்பான சமூக சேவையினால் சுறுசுறுப்புடன் வாழ்ந்து வந்த அமரர். சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்களின் இவ்வுலக திடீர் மறைவானது எம்மைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது.

"பிறப்புண்டேல் யாவர்க்கும்
இறப்புண்டாம்"

எனும் கூற்றுக்கிணங்க நிலை இல்லா இவ்வுலக வாழ்வில் தன் சேவையினால் நிலையான நினைவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் ஒவ்வொருவரது மனங்களிலும் பதிவிட்டுச் சென்றவர் அமரர்.சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்கள். தான் வாழ்ந்த சமூகத்தில் மட்டுமன்றி தன் வாழ்நாளில் எம் இனத்தின் அடையாளங்களையும் இந்து மதத்தின் தொன்மையையும் எவரும் அழித்துவிடக் கூடாது என்பதற்காக அர்ப்பணித்து போராடியதுடன் எம்மவரை சமயத்தின்பாலும் அற ஒழுக்கத்தின்பாலும் வாழ்வதற்கு வழிகாட்டியவர். அரசியலுக்கு அப்பால் ஆலயங்கள் பலவற்றில் தலைமைப் பொறுப்பை ஏற்று தன்காலத்தில் அழியாத அபிவிருத்திகளின் மூலம் தனித்துவங்களை நிலைநாட்டிய பெருமைக்குரிய ஒரு புனிதர் அமரர்.சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்கள்.

**"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்"**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறள்பாவிற்கு அமைய உலகில் எத்தனையோ மனிதர்கள் தோன்றினாலும் எல்லோரும் மனிதப் பண்புடன் வாழ்பவர்கள் அல்ல. மனிதாபிமானமிக்க பண்புடன் வாழ்பவர்கள் பண்புடையோர். அவ்வாறே வாழ்ந்து இவ்வுலகை விட்டு மறைந்தும் மறையாது நிலைத்து நிற்பவர் பெருமனிதர் அமரர்.சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்கள்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்.**

எனும் குறள்பாவிற்கு அமைவாக தன்னலமற்ற சேவையாற்றி சமூகத்தின் மதிப்புமிக்க மனிதராக வாழ்ந்தவர் அமரர். பசுபதிப்பிள்ளை ஐயா அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் என்பது வாழ்வின் முடிவல்ல, மரணத்தின் பின்பும் சில மனிதர்கள் ஒவ்வொருவரது மனங்களிலும் வாழ்ந்து கொண்டே இருப்பார்கள். அவ்வாறே அமரர்.சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா அவர்களும் எம் மனங்களில் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார். அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல உருத்திரபுரீசுவரன் பாதங்களில் இரண்டறக்கலந்து நித்திய வாழ்வு பெற பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ச. மோகபவன்
தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
திட்டமிடல் பணிப்பாளர்,
“சுகாதார அமைச்சு,
வடமாகாணம்.

| | |
|---|---|
| ஏழ்மையிலும் | - நேர்மை |
| கோபத்திலும் | - பொறுமை |
| ஏமாற்றத்திலும் | - புன்சிரிப்பு |
| தோல்வியிலும் | - விடாமுயற்சி |
| ஆத்திரத்திலும் | - நிதானம் |
| கடமையிலும் | - கருணை |
| நீதியிலும் | - நேர்மை |
| தரித்திரத்திலும் | - பரோபகாரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடு செய்யமுடியாத உறவிழப்பு

நீறணிந்த நெற்றியுடன் நிமிர்ந்த நடைப்புன்சிரிப்பும்,
பேறணிந்த சேவையுடன் பேணும் அருட் தொண்டும்
வீறணிந்த ஈனர் இன அழிப்பைப் போக்கிடவே போரணிந்த சேவை புறங்காட்டா தீவிரத்தோன், பசுவூரிலே பிறந்து பாண்டியனூர் வாழ்ந்தவன் காண் கிளிஊரிலே வந்து கிருபை பல செய்தானே சிவனூர் அவர் கோயில் திருவூரில் கண்ணனுக்கு இன்னுபல உண்டு
நோயிற்கிடவாமல் பாயிற்படுக்காமல்
பரமானாம் பூந்தேரில் பக்குவமாய் போனாரே"

**"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வமாக"** அமைந்து விடுவது உலகவழக்கு. அதற்கு அமைய வாழ்ந்து அமரராகி விட்ட எமது குடும்ப உறவுகளின் விடிவெள்ளியும், முற்போக்கு சமூகச்சிந்தனையாளனும் உற்றார் உறவுகள் மட்டுமல்ல அவரது வாழ்க்கைப் பயணிப்பில் சந்தித்த அனைத்து மக்களையும் அரவணைத்து அன்பு காட்டி உடுக்கை இழந்தவன் கைபோல் இடுக்கண் சுமந்து வாழ்ந்த உத்தம புருஷரின் மறைவு எமது குடும்பத்திற்கும் தமிழ்ச்சமூகத்துக்கும் ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். இவ்வாறான ஒரு மாமனிதரை இனி நாம் காண்பதற்கு நீண்ட நெடும்பயணம் பயணிக்க வேண்டி இருக்கும் என்பது திண்ணம். தான் தேய்ந்து ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்தியைப் போல தன்னலங் கருதாது தன்னால் முடிந்த சேவைகள் செய்து திருப்திகண்ட ஒரு செயல்வீரன். **"செய் அல்லது செத்து மடி"** என்ற வாக்கியத்துக்கு அமைய வாழ்ந்து காட்டிய மாவீரன் அன்பர் பசுதிப்பிள்ளை அவர்களாவார்.

**"நன்றே செய்திட வேண்டும் அதை இன்றே செய்திட வேண்டும்"** என்ற மகுட வாசகத்துக்கு அமைய வாழ்ந்து காட்டியவர். இவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் விசேட சேவை உத்தியோகத்தராக கடமையை ஆரம்பித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதுடன் தான் பணியாற்றிய அனைத்துப் பணி இடங்களிலும் தன்னால் முடியுமானவரை முயற்சி செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மக்களுக்கு சேவையாற்றியதுடன் கடமைக்குமேலாக தன்னை அர்ப்பணித்து கிராமங்களுக்கு நற்பணி புரிந்தமை இன்று காணமுடிகிறது. அவரது இளமைக்காலத்திலும் மாணவப் பருவத்திலும் நீதிக்கு மாறாக ஒருவர் அல்லது குழுமம் பாதிக்கப்படின் துணிந்து நீதியை நிலைகாட்டி பாதிக்கப்பட்டவருக்கு நீதி பெற்றுக் கொடுப்பதில் சாமர்த்தியமாக செயல்பட்டவர். இவர் "நீதி வழுவா நெறிமுறையில்" பயணித்த ஒரு நீதியாளன்.

தனது கடமைக் களங்களிலும் சரி, அரசியல் மேடைகளிலும் சரி, அவரது சமூக வாழ்விலும் சரி

**"சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச் சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து"**

என்ற பொய்யாமொழிக்கொப்ப வாழ்ந்தவர். அடக்கி ஒதுக்கப்பட்ட மக்களுக்கு குறிப்பாக தமிழ் இன அழிப்புக்கும் எதிராக தன்னையும் தன் குடும்பத்தையும் துச்சமென மதித்து எங்கு சென்று கர்த்தால் நடத்தவேண்டுமோ, எங்கு எதிர்ப்பார்ப்பாட்டம் செய்ய வேண்டுமோ இன அழிப்புக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராக கிளர்ந்தெழுந்து நீறு பூத்த நெருப்பாகச் செயற்பட்டவர். இதனால் இவரும், இவரது குடும்பமும் அன்றும் இன்றும் பல பாதிப்புக்களை அடைந்தனர். இதனைக் கூட அவர் ஒரு பொருட்டாக மதித்ததில்லை தனக்கு சில உடல் நோய்கள் இருப்பினும் அதைப் பொருட்படுத்தாது எங்கு சமூகப்பணி செய்ய வேண்டுமோ? எங்கு சமயப்பணி நடத்த வேண்டுமோ அங்கெல்லாம் செயற்பட்டவர்.

**"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"**

என்ற தாயுமானவரின் வரிகளுக்கமைய சமூகத்துக்கும், தனது உறவுகளுக்கும் எவ்வகையில் பாதிப்பு வரினும் உடன் சென்று உதவும் கொடையாளனாவான். பூக்களின் வாழ்வு குறுகிய ஆயுள் கொண்டது. அவை அழகானதும் வாசனையுடையதுமாகும். இதே போன்று நல்ல மனிதர்களை நெடுங்காலம் இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழவிடுவதில்லை. இதே நிலை தான் எமது உறவன்பன் பசுபதிப்பிள்ளையின் முடிவுமாகும்.

பாண்டியன் குளத்தில் கிராம உத்தியோகத்தராக பணிமாற்றம் பெற்று சீரிய நற்பணிகளாற்றி கிளிநொச்சி மண்ணுக்கு மாற்றலாகி வந்து பல பகுதிகளில் சேவையாற்றியுள்ளார். கிளிநொச்சி மண்ணில் கடமையாற்றினாலும் வளம்கொழிக்கும் வன்னி வளநாட்டு மக்கள் அனைவருக்கும் சேவையாற்றியது மட்டும் அன்றி தமிழ் மக்களுக்கு எப்பாகத்தில் இன்னல் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் குரல் கொடுத்து தன்னால் முடிந்தவரை உதவியவர்.

**"பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால்**
**சங்காரம் நிகரென்று சங்கே முழங்கு"**

என்ற வாசகம் அவரது வாயில் அடிக்கடி வருவதை நாம் கண்டோம் அதன்படி வாழ்ந்தும் காட்டிய மகான். தனது சமூக வாழ்வியலில் ஏழ்மையில் வாடி, வக்கற்ற, வகையற்ற மக்களின் துன்பதுயரங்களில் பங்கெடுத்ததுடன் தன்னால் முடிந்த உதவிகளையும் செய்துள்ளார்.

குறிப்பாக ஏழ்மை நிலையில் உள்ள தன்னிடம் வந்தணுகிய மாணவர்களுக்கு தமர்பிறர் என்றில்லாது கணிசமானோரின் கல்விக் கரை ஏற்றியது குறிப்பிடத்தக்கது. இதனால் தான் என்னவோ

**" ஊரார்பிள்ளையை ஊட்டி வளர்த்தால்**
**தன் பிள்ளை தானே வளரும்"**

என்ற வாக்குக்கமைய அவரது பிள்ளைகளின் கல்விப் பயணத்தில் பாரிய இடையூறுகள் தடங்கல்கள் வந்தும் அவரது பிள்ளைகளை மிகச் சிறந்த கல்விமான்களாக கடவுள் கரை சேர்த்துள்ளார் .

**"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு"**

என குறள் கூறுகின்றது. அதற்கேற்ப அவரது பிள்ளைகளும் பிள்ளைகளது கணவர்களும் வாழ்ந்து வளம் பெறுகின்றனர். இது இறைவனின் செயல்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இவருக்குக் கிடைத்த இரு வாரிசுகளான அன்புப் பேரக்குழந்தைகளின் அரவணைப்பு இவரது இறுதிக்காலத்தில் கிடைத்த விலை மதிக்க முடியாத வெகுமதியாகும். இவர் தனது இரு பேரக்குழந்தைச் செல்வங்களையும் ஒரே சமயத்தில் இரு கைகளிலும் ஏந்தியவாறு ஆசை மொழிபேசி உலவி வருவது இன்றும் எம் கண்களில் நிழலாடுகிறது.

அன்புக்குரிய மைத்துனர் இந்தளவு **"மக்கள் சேவையே மகேசன் சேவை"** என்று தன்னை அர்ப்பணித்ததற்கு அத்திபாரமாகவும், ஆணி வேராகவும், இடிதாங்கியாகவும் அன்றும், இன்றும் இனியும் நொந்து நூலாகிப்போன அவரது துணைவியார் அன்புக்குரிய சகோதரி யோகா அவர்களாவார். அவரது மனைவியார் ஓர் குடும்ப நல சேவையாளராகப் பணிபுரிந்து தன் தியாக உழைப்பினாலும், தேவைநாடி வந்தோரின் சேவகியாகவும் என்றும் மனந்தளரா நிலையும் இன்முகமும், இனியவார்த்தையும் என்றும் முகமலர்வும் கொண்டு தனது வாழ்க்கை பயணத்தில் சந்தித்து கடந்து வந்த காட்டாறுகளும் நீந்திமுடித்த நெருப்பாறுகளும் கொஞ்சமல்ல. அமரர் பசுபதிப்பிள்ளை வாழ்வின் சிகரத்தை எட்ட முக்கிய காரணியாக இருந்துள்ளார் என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இவர் தனது அரச பணிக் காலத்தில் சிறந்த சேவையாற்றியமைக்காக அதிகூடிய விருதான சிறந்த சேவகி என்ற ஜனாதிபதி விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**" தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"**

என்ற குறளுக்கமைய வாழ்ந்தவர், வாழ்பவர், வாழ்வார். எமது சகோதரி என்பதை எவராலும் மறுக்க முடியாது.அமரர் பசுபதிப்பிள்ளை அவர்கள் **"யானை வரும்பின்னே மணி ஓசை வரும் முன்னே"** என்பது போல பிள்ளை அவர்கள் நிற்பதை நீறணிந்த நெற்றி காட்டிநிற்கும். அதற்கமைய அவர் ஆன்மீகப் பணிகளையும் திறம்பட ஆற்றியுள்ளார். பாண்டின்குளத்தில், கிளிநொச்சியில் அவர் பிறந்த ஊரான நெடுந்தீவில், மற்றும் வன்னியின் பல இடங்களின் ஆலய புனரமைப்புகளையும் குடமுழுக்குகளையும் நிகழ்த்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"என்கடன் அடியேனையும் தாங்குதல் என் கடன் பணி செய்து கிடப்பதே"**

என்ற வாக்குகிற்கமைய அருட்பணியாற்றியுள்ளார். இந்த வகையில் பாரிய புனரமைப்புக்களை பல கோவில்களில் பல அன்பர்களை அணுகி நிதி சேகரித்ததுடன் ஆலய பரிபாலன சபையினருடனும், அன்பர்களுடனும் இணைந்து செயற்பட்டு ஆலய புனரமைப்புக்களைச் செய்து குடமுழுக்குகளையும் நடாத்தியுள்ளார். அந்த வகையில் ஜெயந்திநகர் மீனாட்சியம்மன் ஆலயம் அண்மையில் திருநகர் கண்ணன் ஆலயம் மற்றும் சிவநகர் உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் என்பன நிறைவேறின.

இது போன்ற பல ஆன்மீகப் பணிகளை ஆற்றியதுடன் ஆக்கிரமிப்பாளர்களால் ஆலயங்களையும் பொதுமக்களின் வாழ்விடங்களையும் அகழ்வாய்வு என்ற போர்வையில் வயலில் அடாவடித்தனம் செய்தவர்களையும் உட்புகவிடாது தடுத்து வைத்த பெருமை இவரையே சாரும் இவ்வாறான சமூகப்பணி , அரசியல் பணி, ஆன்மீகப்பணி என பல நல்லபணிகளை தனது வாழும் காலத்தில் சீராகவும், சிறப்பாகவும், நேர்மையாகவும் நிறைவேற்றிச் சென்றுள்ளார். அவரது **"ஊன் உடல் அழிந்தாலும் அவரது சேவை உடல் நெடுங்காலம் நிலைத்திருக்கும்"**

பேச இனியான், காணநல்லான், பெருவள்ளல், தேசப்பணி செய்தோன், அன்பாளன், ஆதரவாளன் எம் உறவுகளையும் எம் இன மக்களையும் விட்டுப் பிரிந்தமை பேரிழப்பாகும். இவரது இழப்பால் துன்புறும் அனைத்து அன்புள்ளங்களுடனும், உறவுகளுடனும் இணைந்து இவரது ஆன்மா சாந்தியடைய இறைவன் வேண்டுவோமாக.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

இவ்வண்ணம் பிரிவால் துயருறும்
கணபதிப்பிள்ளை,
முன்னாள் பொது முகாமையாளர்,
கிளி முல்லை மாவட்ட
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவில் நின்றகலாப் பெரு விருட்சம்

வன்னிப் பெரு நிலப்பரப்பிலும், பின் வட மாகாணத்திலும் தனக்கென ஒரு முத்திரை பதித்த பன்முக ஆளுமை கொண்ட மனிதராக, (மக்கள் மனதில் இடம் பிடித்த ஒருவன் தான் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை) இவரின் ஆற்றல்களை சிறுபராயத்திலிருந்து அவரோடு ஒன்றாக இருந்த உறவினருக்கு மட்டுமே புரிந்திருக்கும். அவருக்கென பொறுப்புக்கள் வந்து சேர்ந்ததும் அதனுடன் இணைந்து பொது வேலைகளிலும் ஈடுபட்டார். அந்த நாட்களிலும் எடுக்கும் வேலைகளை முழுமையாக நிறைவேற்றினார் என்பது செவி வழி கிடைத்த செய்திகள். ஆனால் நேரடியாக அவரின் ஆளுமையைக் காணக்கூடிய வாய்ப்புக்கள் பல ஆண்டுகளாக எனக்குக் கிடைத்தது. எப்படிப்பட்ட பணியாக இருந்தாலும் இவரிடம் கொடுத்தால் முழுமையாக நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை பொதுவாகவே அனைவரிடமும் இருந்ததல்லாமல் நிறைவேற்றியுமுள்ளார். இவர் போன்ற பன்முக ஆளுமையுள்ளவர் கிடைப்பார்களா எனும் சந்தேகமும் தற்பொழுது எழுந்துள்ளது. அவர் இதுவரை நிறைவேற்றிய செயற்பாடுகள் சொல்லிலடங்காது.

**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுள்**
**தெய்வத்துள் வைக்கப்படும்”**

எனும் குறளுக்கு சொந்தக்காரன் பசுபதிப்பிள்ளை அவர்கள் என்றே சொல்லலாம். எப்பொழுதும் நெற்றியில் சிவத்திரு நாமம், சிரித்த முகம், துன்பம் கண்டு நெகிழும் உள்ளம், எதனையும் நேருக்கு நேர் சொல்லும் நெஞ்சுரம், மனதால் கூட மற்றவர்களுக்கு தீங்கிளைக்காத தன்மை கொண்ட வெள்ளை உள்ளம்.

கருணை, காருண்யம், அன்பு, பண்பு, நேசம் என்றும் போற்றுவதற்குரிய மனிதப் பண்புகளை மட்டுமே தன்னகத்தில் கொண்டு தெய்வப்பிறவியாய் வாழ்ந்து மறைந்த அன்னாரின் இழப்பை இயற்கையால் மட்டுமல்ல இறைவனால் கூட இட்டு நிரப்பிவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிலே உறவினராகவும் (சகோதரன்), வளர்ந்தபோது குடும்ப நண்பனாகவும், அறிவுரை கூறுவதில் ஆசானாகவும் இணைந்து கொண்டோம். எமது குடும்பத்தின் அனைத்து விடயங்களிலும் வலது கரம் போல் செயற்பட்டதில் அவருக்கு நிகர் அவராகவே இருந்துள்ளார்.

இவர் போன்ற மனிதர்கள் இனிக் கிடைப்பார்களா எனும் ஏக்கத்தை ஏற்படுத்திச் சென்ற அமரர் அவர்களின் இழப்பு ஏற்கமுடியாததாக இருந்தாலும் "பிறப்பவர் ஒரு நாள் இறப்பது நியதி" எனும் வாக்கியமும் அவருடையதே எனவே அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களுடன் அன்னாரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திப்போமாக

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

விருட்ச நிழலில்
**Friend** த.இராசரத்தினம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பசுபதிப்பிள்ளை நினைவாக உருவாக்கப்பட்ட பாடலின் வரிகள்

***சரணம் 01***

திருக்கோவில் இசை எங்கும் கேக்குதய்யா-இங்கு
திருநீறு பட்டையோடு வாருமையா
திருக்கோவில் இசை எங்கும் கேக்குதய்யா-இங்கு
திருநீறு பட்டையோடு வாருமையா
அறம் பேசும் அற்புதனை காணலையே
அறநெறி பிள்ளைகளும் தேடுதைய்யா
அறம் பேசும் அற்புதனை காணலையே
அறநெறி மழலைகளும் வாடுதையா

***சரணம் 2***

விதை நிலத்தின் கல்லறைகள்
கேட்குதையா
ஒளி கொடுக்க நீ இல்லையே
தேடுதய்யா
அரசியலின் செயல் வீச்சு
அறுந்ததையா
ஏழ்மைகளின் பெருவெளிச்சம்
அணைந்ததையா..
பரம் பொருளின் பெயர் சூடிய
பசுபதிப்பிள்ளையே!
காலனுடன் போவது இது சரியோ?
வரம் தந்த ஈழ நிலம் வழி அனுப்ப
விழி மூடி போவது இது முறையோ?.....

**தே.பிரியன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுபதிப்பிள்ளை ஐயா
# நெஞ்சிருக்கும் வரை நினைவில் வாழ்வார்

அமரர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா வடக்கு மாகாண சபை மூலமாக எனக்கு அறிமுகமான ஒருவர். பசுபதிப்பிள்ளை ஐயா என்று எல்லோரும் வாஞ்சையோடு அழைக்கும் இவர் மாகாணசபை உறுப்பினர்களில் வித்தியாசமான குணவியல்புகளைக் கொண்டவர். குணவியல்புகள் என்பதனை விட நற்பண்புகளைக் கொண்டவர் என்பதுதான் கூடுதல் பொருத்தமாக இருக்கும். பொதுவாக அரசியல்வாதிகளிடம் காணப்படாத உயரிய பண்புகளை அவர் கொண்டிருந்தார். அதனால் அவர் எப்போதும் என் நேசிப்புக்கு உரியவராகவே திகழ்ந்தார்.

அவர் மாகாண சபையில் இடம்பெற்ற சூடான வாதப் பிரதிவாதங்களில் கலந்துகொண்டு ஆணித்தரமான கருத்துகளை எப்போதும் முன்வைப்பவராக இருந்தார். அவரது வார்த்தைகளில் அநீதிக்கு எதிரான தீப்பொறிகள் பறக்கும். அதேசமயம், பழமொழிகள் - உவமான உவமேயங்களின் மூலம் தான் சொல்லவந்த கருத்துகளை சபையோரின் மனங்களில் பசுமரத்தாணிபோல ஏற்றும் சூட்சுமம் தெரிந்தவராகவும் இருந்தார். அவரது உரைகளுக்காக எப்போதும் நான் காத்திருப்பேன்.

கட்சிகளின் நலன்களையும் தமது தனிப்பட்ட விருப்புவெறுப்புகளையும் முன்னிறுத்துகின்ற அரசியல் வாதிகளின் மத்தியில் இவர் சுயநலன் கடந்து பொதுநலன்களினதும் இனநலன்களினதும் பாற்பட்டு முடிவுகளை எடுக்கும் ஒருவராகவே எப்போதும் இருந்து வந்துள்ளார். கட்சித் தலைமைகள் தவறான முடிவுகள் எடுக்கும்போது பெட்டிப்பாம்பாகக் கட்டுண்டு கிடக்கும் சுயநல அரசியல்வாதிகள் மத்தியில் கட்சியின் விருப்புவெறுப்புகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து தமிழ்த்தேசியத்தின் பாற்பட்டு நிலைப்பாடுகளை மேற்கொள்பவராகவும் இருந்தார். இந்தப் பண்புகளுக்கு இவர் மாகாணசபை அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கு முன்பாகவே தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டதும் ஒரு காரணமாக இருக்கக்கூடும்.

மாகாணசபையில் எந்தக் கட்சியையும் சாராத ஒரு பிரதிநிதியாக நான் இருந்து கொண்டு சந்தித்த நெருக்கடிகள், அவமானங்கள் ஏராளம் அப்போதெல்லாம், தான் சார்ந்த கட்சியினரின் விருப்புவெறுப்புகளையும் கடந்து எனக்கு ஆத்ம பலமாக விளங்கினார். மாகாணசபை முன்னெடுத்த பணிகளைவிடச் செய்யத்தவறிய பணிகள் ஏராளம். இதற்கு மாகாணசபைக்குரிய அதிகாரங்களின் பற்றாக்குறைவு என்பதற்கும் அப்பால் கட்சிகளுக்குள்ளே நிலவிவந்த உட்பகையும் குழுமனப்பாங்கும் பெருங்காரணம் என்பதை இவர் வெளிப்படுத்த ஒருபோதும் தயங்கியது இல்லை.

பசுபதிப்பிள்ளை ஐயா இன்று எம்மத்தியில் இல்லை. அவர் சுலபமாக மறந்துவிடக்கூடிய ஒருவர் அல்லர். நெஞ்சிருக்கும்வரை அவர் எங்கள் நினைவுகளில் வாழ்வார். தமிழ்த்தேசியப் பற்றாளனாகவே இறுதிவரை வாழ்ந்து ஓய்வுகாணாது உழைத்த அன்னாரின் ஆத்மா இயற்கை என்ற பேரன்னையின் மடியில் இனிமேல் ஓய்வு கொள்ளட்டும்.

பொ. ஐங்கரநேசன்
தலைவர்
தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்
முன்னாள் அமைச்சர் - வடக்கு மாகாணசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என வாதிட்டு வந்த அமரர் உயர்திரு. சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை அவர்கள்

எமது அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய திரு. சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை அவர்களுடைய வாழ்க்கை மற்றவர்களின் மனதில் பதியப் பெற்றதோர் சிறந்த வாழ்க்கையாகும். தன்னுடைய பணிகளின் மூலமாக அவர் இந்தச் சிறப்பை உருவாக்கினார்.

நான் கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக இருந்த காலப்பகுதியில் திரு.சு.பசுபதிப்பிள்ளை அவர்கள் 13 ஆண்டுகளுக்கு மேலாக கனகபுரம் கிராம அலுவலராகக் கடமையாற்றியுள்ளார்.

அதன் பின்பும் பல கிராமங்களில் கிராம அலுவலராகக் கடமையாற்றியுள்ளார். அதனால் அவரின் செயற்பாடு எனக்கு நன்கு தெரியும். பழகுவதற்கு இனிமையானவர். தனது கடமையைச் சரியாகவும், பொது மக்கள் மனம் சந்தோஷப்படக்கூடிய முறையிலும் செய்து வந்தார்.

இரவு பகலாக செயற்பட ஒரு சிறந்த சேவையாளன். தனது தொழிலை, சேவை மனப்பாங்கோடு செய்து வந்தார். பிரதேச செயலாளர், மாவட்டச் செயலாளர் ஆகியோரிடமிருந்து மட்டுமல்ல, அரசுசார்பற்ற நிறுவனங்கள் உதவி செய்யக்கூடிய உள்ளங்களிட மிருந்தும் பல உதவிகளைப் பெற்று தான் கடமைபுரியும் கிராம மக்களுக்கு மட்டுமல்ல, மாவட்ட ரீதியிலும் உதவி செய்துள்ளார். இவரின் உதவியால் பல குடும்பங்கள் இப்போ நல்ல நிலையில் வாழ்கின்றார்கள். படிப்பதற்கு பல மாணவர்களுக்கு உதவி செய்துள்ளார். எங்கள் கிராம அபிவிருத்திச் சங்கம் நடாத்துகின்ற சகல செயற்பாட்டிலும் முன்னின்று செயற்படுவதோடு எங்களுக்கு பல நல்ல அறிவுரைகளைக் கூறியும்,எங்கள் கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு நல்ல கிராமமாக மிளிர்வதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பாடுபட்டுள்ளார். கனகபுரம் விளையாட்டுக்கழகம் விளையாட்டில் பல சாதனைகளைப் படைப்பதற்கு விளையாட்டுக்கழக நிர்வாகத்தினருடனும், விடையாட்டு வீரர்களுடனும் சேர்ந்து இரவு பகலாக பாடுபட்டுள்ளார்.

இவரின் சேவையை கனகபுரம் மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். கனகபுரம் கிராம அலுவலராக கனகபுரத்திற்கு வந்தபடியால் பல நல்ல விடயங்களைத் தானும் கற்றுக் கொண்டதாக அடிக்கடி என்னிடம் கூறுவார். கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் சிறப்புமிக்க அருள்மிகுந்த ஆலயங்களான ஜெயந்தி நகர் மீனாட்சி அம்மன் ஆலயம் கிளிநகரில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஸ்ணர் ஆலயம், உருத்திரபுரத்தில் அமைந்துள்ள கிளிநொச்சி உருத்திரபுரீசுவரர் சிவாலயம். ஆகிய ஆலயங்களின் தலைவராக இருந்து கும்பாபிசேகங்களை நல்ல முறையில் நடாத்தியுள்ளார். அதனால் கிளிநொச்சி மாவட்ட சைவமயப் பெரியோர்களாலும், சைவ மக்களாலும் நன்கு மதிக்கப்பட்டு வந்துள்ளார்.

கிளிநொச்சி ஸ்ரீ கிருஸ்ணர் ஆலயத்தில் திரு. சு. பசுபதிப்பிள்ளை அவர்கள் தலைவராக இருந்து கும்பாபிசேகம் நடாத்திய காலப்பகுதியில் நான் உபதலைவராக செயற்பட்டு வந்தேன். அவரது செயற்பாட்டை நேரில் பார்த்து சந்தேசப்பட்டவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் மிகவும் திருப்தியடைகிறேன்.

சமாதான நீதவானாக இருந்து ஏராளமான மக்களுக்கு அரும்பணியாற்றியுள்ளார். தமிழ் மொழி, தமிழ் கலாசாரம் என்பன மென்மேலும் வளர வேண்டுமென்ற மனப்பாங்கோடு இரவு பகலாக அரும்பாடுபட்டு வந்துள்ளார்.

இரு புதல்விகளுக்குத் தந்தையான இவர். அவர்களைச் சிறந்த கல்விமான்களாக்கியதோடு நல்லொழுக்கமுடையவர்களாகவும், எல்லோரும் போற்றக் கூடிய முறையில் ஆளாக்கிவிட்டுச் சென்றுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு பகலாக மாவட்ட மக்களுக்காகவும் தனது கிராமத்திற்கும் பாடுபட்டதினால் இளம் வயதிலே நோய்வாய்ப்பட்டுவிட்டார் தனது நோயையும் கவனியாது "மக்கள் சேவையே மகேசன் சேவை என்று நினைத்து செயற்பட்டபடியினால் குறைந்த வயதில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

எந்தச் சபையிலும் "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்று யாருக்கும் பயப்படாமல் எடுத்துக் கூறும் துணிவும், வீரமும் உடையவர்.

இவரது இறப்பின் தன்மை இவரை ஒரு சிறந்த சமூக சேவகராகவும், இரக்க சிந்தையுடையவராகவும் வெளிக்காட்டியுள்ளமை போற்றுதற்குரியது.

அவரால் அவரது பணிகள் சிறப்பிக்கப்பட்டன. வாழும் போதே புகழுடன் வாழ்ந்தார். எப்படி வாழ வேண்டும் என்பதற்கு வழிகாட்டியாக இருந்தார். கிளிநொச்சி மாவட்ட மக்களின் மனதில் அவரது நாமம் என்றும் வாழும். அவரது ஆத்மா சாந்தியடையவும், அவரது துணைவியார், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் எல்லோரின் மனம் ஆறுதலடையவும் எல்லாம் வல்ல இறை பரம்பொருளை வேண்டி நிற்கிறேன்.


அ. கனகரத்தினம்,<br>
ஓய்வு நிலை அதிபர்,<br>
சமாதான நீதவான்,<br>
கனகபுரம் முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்,<br>
கிளிநொச்சி மாவட்ட அ.ஓ.ஊதிய நம்பிக்கை நிதியத் தலைவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை

மண்ணில்

15

06

1948



விண்ணில்

02

10

2022

விழிநீர் சொரிய வழி அனுப்பி வைக்கின்றோம்
ஐயா பசுபதிப்பிள்ளையாரே!

மாகாண சபைதனிலே நீங்கள் மாண்புடனே வெற்றி கொண்டு
மிடுக்குடனே "மக்கள் நலன், மக்கள் நலன்" என்றே
ஓங்கி ஒலித்த குரல் சட்டெனவே இன்று மௌனித்ததேனோ?
கிராம அலுவலராய் இருந்து உன்னத பணிகள் செய்தே
ஊரவர் அனைவர்க்கும் உத்தம மாமனிதராய் இருந்து
உதவி செய்த கரங்கள் இன்று
அசைவற்றுப் போனதேனோ?

நீறணிந்த நெற்றியும் நேர்கொண்ட பார்வையும்
இலட்சியக் கொள்கையும்
இடை நடுவில் நின்று போனதேனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான மனைவியை அரவணைத்து ஆசையுடனே
குழந்தைகளைப் பேணிக் காத்து அதி சிறந்த மருமக்களைப்
பெற்றுக் கொடுத்து பேரக் குழந்தைகளோடு கொஞ்சிக் குலாவி
மகிழ்ந்திருந்த உங்களுக்கு
சடுதியாய் வந்த வருத்தம் தான் என்னவோ?
இடி விழுந்த செய்தியை துடிதுடிக்க கேட்டதுமே
அனலாய் வெந்து அல்லல் உற்றே வாடுகின்றோம். ஐயாவே!

ஆயிரம் உறவுகள் அருகிருந்தாலும் உங்களின்
அன்பும் அரவணைப்பும் போல் வருமா எங்களுக்கு?
எங்களுயிர் உத்தமரே உங்களை அவசரமாய்ச் செல்ல
ஆண்டவன் அழைத்ததேனோ?

ஆற்றொணாத் துயரினிலே துவண்டு துடித்து நிற்கும்
அனைத்து உறவுகளுக்கும் ஆறுதல் சொல்ல வார்த்தையின்றி
துடித்து நிற்கின்றோம் எங்கிருந்தாலும்
உங்கள் ஆத்மா பசுபதீஸ்வரன் பாதங்களில்
சாந்தியடைய வேண்டுவதேயன்றி
வேறென்ன செய்வோம் நாம்?
மீண்டுவரமாட்டீரோ?

மரண வேதனையில் மனமிடிந்து, துடித்து நிற்கும்
சித்தப்பா,
புண்ணிய மூர்த்தி குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையைப் போன்ற "G.S அங்கிள்"

பசுபதிப்பிள்ளை **G .S** என்று அனைவராலும் அறியப்பட்ட திருநகரைச் சேர்ந்த சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை ஐயா எமது கனகபுரம் கிராமத்திற்கு கிராம சேவகராகக் கடமையாற்ற வந்த போது தான் நான் இவரை முதன் முதலில் கண்டிருந்தேன். தனது சேவைக்காலத்தில் எமது கிராமத்தின் முன்னேற்றப்பாதைக்கு சிறந்த சேவையை வழங்கியிருந்தார்.

சினங்கொள்ளாத சுபாவமுடைய இவர் இன்னார் இனியார் என்றிலாது சேவை நாடி வரும் அனைவருக்கும் நேரகாலம் நோக்காது தேவைகளை நிறைவேற்றிய ஒரு அரச உத்தியோகத்தர். ஒரு வகையில் இவரை நடமாடும் கிராம சேவகர் என்று கூடச் சொல்லலாம். அந்த அளவிற்கு எந்த இடத்திலும் எந்தநேரத்திலும் இவரது சேவையை ஊர் மக்களால் பெற்றுக் கொள்ள முடிந்திருந்தது.

நான் சுகாதாரத்துறை பணிக்குள் உள்ளீர்க்கப்பட்டிருந்த போது கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தராகக் கடமையாற்றி வந்திருந்த திருமதி. யோகேஸ்வரி பசுபதிப்பிள்ளை அவர்களுடன் இணைந்து பணியாற்றக் கிடைத்தது. அயலாருடன் அன்பைப் பேணுவதில் இணைக்கு ஈடான துணையாக இவரை நான் கண்டேன். பின்வந்த நாட்களில் "**G .S** அங்கிளின் யோகேஸ் அக்கா" என அன்புரிமையோடு நான் மனம்திறந்து கதையாடும் குடும்ப உறவுகளாக நாம் மாறிவிட்டோம்.

மைதிலி, நிருத்திகா என இரண்டு பெண் செல்வங்களுடன் பகட்டாரவாரமற்ற அமைதியின் உருவமாக இல்லறம் மகிழ்ந்த இணையரின் அன்பொற்றுமை கண்டு நான் வியந்த நாட்கள் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G .Sஅங்கிள் பணி ஓய்வுறும் காலம் மட்டுமல்ல இவர் தான் சிந்திக்கும் செயற்பாட்டை நிறுத்திக் கொண்ட இறுதித் தருணம் வரை மக்களை நேசித்து வாழ்ந்தவர். அன்னாரது ஊனிலும், உதிரத்திலும் சமூக நீதி ஊறிப் போயிருந்த காரணத்தினால் போருக்கு முன்னும் சரி பின்னும் சரி அற்பத்தனங்களுக்காக கொள்கைகளை அடமானம் வைக்காமல் தலை நிமிர்ந்து நின்றிருந்தார்.

அரசியல் பதவிகள்,அந்தஸ்துகள் வாய்த்தபோதும் இவர் தனது சரீரத்தில் செறிந்து போயிருந்த ஆன்மீக அடையாளங்களையும் கலாசார பண்பாட்டு விழுமியங்களையும், கடைசி வரை கை கழுவாது வரித்துக்கொண்டு வாழ்ந்தார் என்பதை ஊருலகம் நன்கறியும்

என்னைக் காணும் போதெல்லாம் புன்னகையை உதிர்த்து "பிள்ளை அம்மா" என அன்போடழைக்கும் தந்தையைப் போன்ற பெரியவரின் குரல் இன்றும் காதில் எதிரொலிக்கிறது.

எப்போதுமே திருநீறணிந்த நெற்றியும் வெள்ளை வேட்டியும் அணிந்த அங்கிளின் உருவம் மனக்கண்ணில் இப்போதும் நிழலாடுகிறது. அன்னாரின் ஆத்மா பரமபதமடைய எல்லாம் வல்ல பால விநாயகரின் பாதார விந்தங்களைப் பணிகின்றேன்.

திருமதி. குகவதனி கிருஸ்ணமூர்த்தி
கனகபுரம்,
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதாகைகள் பிரசுரித்தோர்

01 உருத்திரபுரம் சிவாலய அறங்காவலர் சபை

02 இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம்

03 மறுமலர்ச்சி சனசமூக நிலையம், திருநகர் வடக்கு

04 ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய பரிபாலன சபையும் உபயகாரர்களும், திருநகர் வடக்கு

05 பிள்ளையார் கமக்கார அமைப்பும், விவசாயிகளும் ,ஸ்கந்தபுரம், அக்கராயன்.

06 பாடசாலைச் சமூகம், கிளி /உருத்திரபுரம் மகா வித்தியாலயம்

07 சுகாதார வைத்தியஅதிகாரி, மற்றும் உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ,கரைச்சி.

08 கனகபுரம் விளையாட்டுக்கழகம், கிளிநொச்சி.

09 கிராம அபிவிருத்திச் சங்கம் பாண்டியன்குளம்

10 மாவீரர் பணிக்குழு கனகபுரம், கிளிநொச்சி.

11 திருநகர் முத்துமாரியம்மன் ஆலய நிர்வாகத்தினரும், குருக்களும்.

12 கிளி/ அக்காரயன் மகா வித்தியாலயம், கிளிநொச்சி.

13 மயிலழகன் மிதிவண்டி திருத்தகம், திருநகர், பி.கஜன்

14 ஜெயந்திநகர் ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபை, ஜெயந்திநகர் மக்கள்.

15 தம்பியையாவும், குடும்பத்தினரும்.

16 அரச குடும்ப நல சேவை உத்தியோகத்தர் சங்கம், கிளிநொச்சி மாவட்டம்.

17 சிறி காந்தா சனசமூக நிலையமும், அன்பு உறவுகளும், கனகபுரம், கிளிநொச்சி.

18 கிளிநொச்சி மாவட்ட அழகக தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் ( வ-து) நிர்வாகமும், அங்கத்தவர்களும்

19 கணேசபுர மூலக்கிளை வட்டார மக்கள் (TNA)

20 சைவ மங்கையர் கழகம், ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, திருநகர், கிளிநொச்சி.

21 க.பரிமளறாஜ் (பாமகன்) குடும்பம், பரந்தன்

22 லோகன் பந்தல் சேவை, திருநகர், கிளிநொச்சி.

23 க.முருகவேள்(றஞ்சன்) 37, நாகதம்பிரான் வீதி, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.

24 LION CLUB OF KILINOCHCHI NEW CENTURY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 கமல் (தாஸ்), பிரான்ஸ்.
26 வன்னிப் பெருநிலப்பரப்பு சைவக் குருமார் ஒன்றியம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்.
27 சண் வெதுப்பகம்
28 சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள் JP
29 கிராம அபிவிருத்திச் சங்கம் , மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், திருநகர் வடக்கு, கிளிநொச்சி.
30 அ.கனகரத்தினம் குடும்பத்தினர், இல: 53 கனகபுரம், கிளிநொச்சி.
31 ச.ஜீவராசா, பிரதேசசபை உறுப்பினர், தமிழ் தேசியக் கூட்டமைப்பு.
32 வெற்றிப்பாதை சனசமூக நிலையம், புதுக்காடு , இராமநாதபுரம்
33 பூநகரி, நல்லூர் வட்டார மக்கள்.
34 தவிசாளர், உறுப்பினர்கள், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை , பளை.
35 S.R.J.சுதன், ஆசிரியர் குடும்பம், கணேசபுரம்.
36 பாடசாலை அபிவிருத்திச்சங்கம், கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்.
37 கிளிநொச்சி ஸ்ரீ கிருஸ்ணர் ஆலய பரிபாலன சபையினர், ஆலய பிரதமகுரு, கிருஸ்ணபக்த அடியார்கள்.
38 இலங்கை தமிழ் அரசுக்கட்சி, மாவட்டக் கிளை, கிளிநொச்சி.
39 தலைவர், நிர்வாக உறுப்பினர்கள், பசுந்தாரகை தொழில் முனைவோர் சி.க.கூ.சங்கம், கிளிநொச்சி.
40 வர்த்தக சமூக அபிவிருத்திச் சங்கம், கிளிநொச்சி.
41 கரைச்சிப் பிரதேச தவிசாளர் உறுப்பினர்கள், பணியாளர்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பு.
42 த.இராசரத்தினம் குடும்பம்.
43 வீஸ்மர் குழுமம்.
44 கார்த்தி மாமா குடும்பத்தினர்.
45 பாண்டியன்குள மக்கள்.
45 மகளீர் அணி, இலங்கை தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி.
47 இலங்கை தமிழரசுக் கட்சி, மாவட்டக்கிளை, வவுனியா.
48 திருநகர் விளையாட்டுக் கழகம், திருநகர்.
49 திருநெறிக்கழகம், கிளிநொச்சி.
50 மாதர் அபிவிருத்தி சங்கம், விவேகானந்தநகர் கிழக்கு.
51 பசுபதிப்பிள்ளை கந்தையா (JP) பாண்டியன்குளம், நட்டாங்கண்டல்.
52 இளங்கதிர் விளையாட்டுக்கழகம், பாண்டியன்குளம்.
53 கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கமும், கனகபுர மக்களும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

❖ ஐயம்பிள்ளை சுப்பிரமணியம்
+
❖ தெய்வானைப்பிள்ளை

- ❖ பசுபதிப்பிள்ளை
- ❖ குலசிங்கம்
- சச்சிதானந்தம்
- பரமானந்தம்
- அறிவழகன்
- அருந்ததி
- பரஞ்சோதி
- மகாலிங்கம்
- ரவீந்திரன்

❖ தனுக்கோடி முருகேசு
+
❖ பார்வதி

- பொன்னம்மா
- யோகராசா
- யோகேஸ்வரி
- ❖ கேதீஸ்வரி

பசுபதிப்பிள்ளை + யோகேஸ்வரி:

- மைதிலி
  +
  சுதாகரன்
  - பிரபாதனா
  - பிரபாகரன்
- நிருத்திகா
  +
  சரண்ராஜ்
  - மிதுன்

❖ அமரர்களைக் குறிக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம் குடும்பத்தின் குலவிளக்கு
அமரர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை
அவர்களின் மறைவு அறிந்து துயர் நிகழ்வில் கலந்து கொண்டோர், அனுதாபத்தையும் அஞ்சலியையும் பகிர்ந்து கொண்டோர், வெளிநாடுகளில் இருந்து நிகழ்வில் பங்குகொள்ள முடியாத நிலையில் துயரம் விசாரித்துத் தேற்றியோர், இறுதி நிகழ்வில் பங்கு கொண்டு உதவி ஒத்தாசைகளைப் புரிந்தோர், இரங்கல் உரைகளை வழங்கிய மக்கள், பிரதிநிதிகள், நிறுவனத்தினர், பெரியோர், எமை எல்லா விதத்திலும் தேற்றி கரம் தந்தோர், ஊரார், உலகத்தார், சுற்றமென அத்தனை உறவுகளுக்கும் எம் நன்றிப் பெருக்கு.

இங்ஙனம்
குடும்பத்தினர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடமையில் காவலன்
கண்ணியத்தில் தூயவன்
தமிழின் பற்றாளன்
சைவத்தின் திருத்தொண்டன்
இனத்தின் சேவகன்
நெற்றி நிறைந்த திருநீறும்
வெண்ணிற ஆடையுமாய்
கோயில் பணி செய்த அப்பர்
துயிலும் இல்லத்தின் உழவாரன்
குடும்பத்தின் சூரியன்
ஒப்பற்ற வெள்ளொளி
இயக்கப் போராளி
கிராமத்தின் சேவகன்
மாகாண சபையின் உறுப்பினர்
மக்கள் மனங்களில் மட்டுமல்ல
வரலாற்றிலும் வாழும்
தெய்வத் திருமகன்

[illegible] பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org